1144

# முஹம்மத் நபிகள்

(ஸல்)

இதனை ஆக்கியோன்:

(நறையூர்)

**B. தாவூத்ஷா, B.A.,**

"தாருல் இஸ்லாம்," ஆசிரியன்.

பிரசுராலயம்:

...ருல் இஸ்லாம் புஸ்தகசாலை

சென்னை.

Q7:31
N28
150656

# நபிகள் நாயகமும் நான்கு தோழர்களும்

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது.

(திருத்திப் புதிப்பித்த இரண்டாம் பதிப்பு)

நபிகள் நாயகத்தின் சரித்திரச் சுருக்கமும், அவர்களுக்குப்பின் வந்த முதல் நான்கு க'லீ'பாக்களின் சரித்திரமும், இஸ்லாமியக் குடியரசின் குணதிசயமும் சரித்திரக் கிரமப்படி மிக ஒழுங்காய் எழுதப்பட்டுள்ளன. இந்தப் புதிய இரண்டாம் பதிப்பில் 4 க'லீபாக்களுக்குப் பின் நிகழ்ந்த வைபவங்களும் கர்ப'லாவின் யுத்தம்வரை நிகழ்ந்த சரித்திரத்துடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதில் இமாம் ஹஸன், ஹுஸைன் முதலியோரின் அதிக துயரமான சரித்திரங்களும் காணப்படும். இஃது ஒவ்வோர் ஆண் பெண்ணுக்கும் அத்தியாவசியமானது. இம்மாதிரியான நூல் இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை. இந்த 2-ஆம் பதிப்பு முதற் பதிப்பைக் காட்டினும் பல திருத்தங்களுடன் வெளியிடப்பட்டுள்ளது. அழகிய அச்சு! உயரிய பைண்டு!

இதன் விலை ரூ. 1—4—0 தான். வி. பி. வேறு. முதற்பதிப்பின் விலையைக் காட்டினும் இஃது அதிகம் குறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. உடனே எழுதுங்கள்! இன்றே படியுங்கள்!

தாருல் இஸ்லாம் புஸ்தகசாலை,

தபாற்பெட்டி நெ. 15,

சென்னை.

இஸ்லாத்தின் காதைகள் நெ.—1.

# முஹம்மத் நபிகள்ஸல்

இதனை ஆக்கியோன்:
(நறையூர்)
பா. தாவூத்ஷா, பீ. ஏ.,
"தாருல் இஸ்லாம்" ஆசிரியன்.

பிரசுராலயம் :
தாருல் இஸ்லாம் புஸ்தகசாலை,
73, தம்புசெட்டித் தெரு,
சென்னை.

விலை] 1928 [அணா 4.

*All Rights Reserved.*

PRINTED AT
THE GUARDIAN PRESS, Ltd.,
158, B. BROADWAY, MADRAS.

# முன்னுரை

இத்தமிழ் நாட்டின்கண் பள்ளிக்குச் செல்லும் முஸ்லிம் சிறுவர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றியேனும் இதன் திரு நபியைப்பற்றியேனும் உள்ளபடி தெரிந்துகொள்ளுதற்கு ஒன்றும் தமிழில் உபாயமில்லாமலே இருந்துவரும் விஷயம் எல்லோருக்கும் நன்கு தெரிந்ததேயாம். பள்ளிச் சிறுர்களுக்கென்று உருவாக்கப்படும் எல்லாத் தமிழ் நூல்களும் பெரும்பாலும் ஹிந்துக்களாலேயே எழுதப்பட்டு வருவதால், அவற்றுள்ளெல்லாம் ஹிந்து மதக் கோட்பாடுகளே பெரிதும் மல்கிக் கிடப்பதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. இவற்றையே முஸ்லிம் சிறுவர்களும் கற்கவேண்டிய அவசியம் நேரிட்டு வருகின்றது. சிற் சில வேளைகளில் அத்தமிழ் நூலாசிரியர்கள் இஸ்லாத்தைப்பற்றியும், இதன் திரு நபியவர்களைப் பற்றியும் எழுதப் புகுங்காலும், அவர்களுக்குக் கிடைப்பன, இம் மார்க்கத்தைப் பற்றிச் செவ்வனே தெரிந்துகொண்டிராத அயல்மதவாதிகளால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கும் பிழையான நூல்களாகவே காணப்படுகின்றன. ஆதலின், அத்தமிழ் நூலாசிரியர் சுயமான இஸ்லாமிய முதனூல்களிலிருந்து விஷயத்தைத் திரட்டி வெளிப்படுத்தவும் சிறிதும் முயற்சியெடுத்துக் கொள்வதில்லை.

இக்காரணத்தினுல்தான் பள்ளிக்குச் சென்று படிக்கும் முஸ்லிம் சிறுவர்களுக்கும், மற்றெல்லாமத ஹிந்துப் பிள்ளைகளுக்கும் உபயோகமா யிருக்கும்பொருட்டு எளிய நடையில் இத்தமிழ் நூல் முதன் முதலாக எழுதி வெளியிடப்பட் டிருக்கிறது. இவ்வாறே நபிகள் நாயகத்துக்குப் பின் வந்த இஸ்லாத்தின் முதல் நான்கு கலீபாக்களின் உண்மையான சரித்திரங்களும் பிறகு முறையே வெளியிடப்படும். இதில் எம் மதவாதிக்கும் தர்க்கத்துக் கிட

மில்லாத மெய்யான விஷயங்களே தக்க ஆதாரமுள்ள மூல கிரந்தங்களி லிருந்து எடுத்தெழுதப்பட் டிருப்பதால், இதை எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் பாடமாக வைத்து, முஸ்லிம் சிறுவர்களுக்கே யன்றி, மற்ற மதப் பிள்ளைகளுக்கும் பால்யத்திலேயே இஸ்லாத்தின்மீதும், இதன் திரு நபியவர்கள் மீதும் பாரபக்ஷமற்ற நல்லபிப்பிராயம் உண்டாகுமாறு செய்து வைப்பார்களென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சிறுவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்குங்கால் ஆங்காங்குக் காணப்படும் ஸல், ரலி, அலை ஆகிய குறியீடுகளின் கருத்தையும் கற்றுக் கொடுத்தல் அவசியமாம். பெரியாரின் பெயர்களை உச்சரிக்குங்கால் மரியாதையாகச் சொல்லப்படும் வாழ்த்துச் சொற்களின் அரபிக் குறியீடுகளே யாகும் அவை. ஸல் என்பது "ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்" என்பதன் சுருக்கமாகும்; இதன் பொருள், "ஆண்டவன் அவர்மீது அருள் புரிவானாக; மேலும் சாந்தி யளிப்பானாக," என்பதாகும். ரலி என்பது "ரலியல்லாஹு அன்ஹு" என்பதன் சுருக்கமாகும்; இதன் பொருள், "ஆண்டவன் அவர்மீது திருப்தியடைவானாக," என்பதாகும். அலை என்பது "அலைஹிஸ்ஸலாம்"என்பதன் சுருக்கமாகும். இதன்பொருள், "அவர்மீது சாந்தி" யுண்டாவதாக, என்பதாகும்.

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள "நபிகள் நாயகமும் நான்கு தோழர்களும்" என்னும் நூலைத் தழுவியே இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. ஆதலின், இந்நூல் துரைத்தனத்தாரின் ஆங்கீகாரம் பெற்ற ஸ்கூல்களுக்கும், மற்றும் பிரத்தியேகப் பள்ளிக் கூடங்களுக்கும், சிறுவர்கள் படிக்கும் மத்ரஸாக்களுக்கும் தக்க பயன்படு மென்பதே அடியேனின் அபிப்பிராயமாகும்.

சென்னை,
30—7—28.

பா. தாவூத்ஷா பீ. ஏ.
ஆக்கியோன்.

بسم الله الرحمن الرحيم
نحمده ونصلي على رسوله الكريم

# முஹம்மத் நபிகள்

## அதிகாரம்—1

### அரப் நாடு

ஆசியா கண்டத்தின் தென்மேற்கு மூலையில் அரப் நாடென்று அழைக்கப் படுகின்ற ஒரு பாலைவனப் பிரதேசமுண்டு; அதன் பெரும்பான்மையான பகுதிகளெல்லாம் மணல் வெளிகளாகவே காணப்படும்; ஆதலின், அந்நாட்டில் ஒன்றும் ஆகாரப் பொருள் விளைவதில்லை.

வருஷ முழுதும் அத்தேசத்தில் அதிக வெப்பமான காற்றே வீசிக்கொண் டிருப்பதால், மனிதர்களும் மிருகங்களும் அங்கே மிகுதியாக மரண மடைந்து கொண்டு வருகிறார்கள். அக்காற்றை அரபிகள் **ஸைமூன்** என்று அழைக்கிறார்கள்; அந்த ஸைமூன் மிகவேகமாக வீசுவதால்

பெரும் பெரும் மணல் மேடுகளெல்லாம் அடிக்கடி ஓரிடத்தி லிருந்து மற்றோ ரிடத்திற்கு அடியோடு அடித்துக்கொண்டு போகப்படுவதுண்டு.

அங்குள்ள அரபிகள் ஒரே இடத்தில் வசிப்பதில்லை; அவர்கள் தங்கள் விடுதிகளை ஓரிடத்திலிருந்து மற்றோ ரிடத்துக்கு அடிக்கடி மாற்றிக் கொண்டே யிருப்பார்கள். முதுகில் குடிசை கட்டிக்கொண்டு வசிப்பவர்களென்று அவர்களையே கூறுதல் வேண்டும். ஏனெனின், அவர்கள் ஒட்டக ரோமத்தால் நெய்யப்பட்ட கூடாரங்களில் வசித்துக்கொண்டு, அந்தக் கூடாரங்களைத் தாங்கள் செல்லுமிடங்களுக்கெல்லாம் உடன் சுமந்து செல்வார்கள்.

அரபிகளுக்கு ஒட்டகங்களும் குதிரைகளுமே முக்கியமான ஐசுவரிய மாகும். அவ்வொட்டகம் அரபிகளையும், அவர்கள் கூடாரங்களையும் தன் முதுகின்மீது சுமந்து செல்கிறது. இன்னமும், ஒட்டகத்தின் பாலும் அவர்களுக்கு உபயோக மாகும். அரபிகள் தங்கள் குதிரைகளை அதிகம் நேசிக்கிறார்கள்; அரப் தேசத்தின் குதிரைகள் உலக முழுதும் பெயர்பெற் றிருப்பதால், அவை அதிகமான விலைக்கு விற்கப்பட்டு வருகின்றன.

அரப் தேசத்தின் மேற்குப் பகுதியானது நீர்வளமும் நிலவளமும் பொருந்திய பூசாரத்தை உடையதாய் அமைந்திருக்கிறது; அப்பகுதிக்கு

அரபிகள் ஹிஜாஜ் என்று பெயர் சொல்வர்; அப் பகுதியில்தான் மக்கா, மதீனு என்னும் இரண்டு புண்ணிய ஸ்தலங்களும் அமைந்திருக்கின்றன.

ஆயிரத்து முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் அந்த அரபிகள் எல்லோரும் மிகப் பொல்லாதவர்களாயிருந்து வந்தார்கள்; அவர்கள் சாராயம் குடிப்பதிலும், சூதாடுவதிலும் கைதேர்ந்திருந்தார்கள். பாடத்தகாத பாடல்களைப் பாடிக் கொண்டும், ஆடத்தகாத ஆட்டங்களை ஆடிக் கொண்டும் தங்கள் காலத்தைக் கழிப்பார்கள். அக் கால அரபிகள் எத்தனை வேண்டுமாயினும் அத்தனை மனைவிகளைத் தாராளமாய் மணந்துகொண்டு வந்தார்கள். அவர்கள் தங்களுக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகள் விஷயத்தில் அபிமானமும், பெண் குழந்தைகள் விஷயத்தில் அருவருப்பும் கொண்டு வந்தார்கள். ஆதலின், அவர்கள் பல சமயங்களில் தங்கள் பெண் சிசுக்களைக் கொன்றும், உயிருடன் பூமிக்குள் புதைத்தும் வந்தார்கள்.

அந்த அரபிகள் ஒரே ஆண்டவனை வணங்குவதில்லை; ஆனால், அவர்கள் பல தெய்வங்களையும், பல விக்கிரகங்களையும் பூஜித்து வந்தார்கள். அவர்கள் தங்கள் தெய்வங்களுக்கு நரபலியும் கொடுத்து, அதனால் தங்கள் தெய்வங்

களைச் சந்தோஷப் படுத்துவதாகவும் எண்ணிவந்தார்கள். இன்னமும், மிருகங்களும் ஒட்டகங்களும், குதிரைகளும், செடி கொடிகளும், கற்பாறைகளும், மணல் மேடுகளும் தெய்வங்களென்றே அவர்களால் கருதப்பட்டு வந்தன.

முன்னொரு காலத்தில் மக்கமாநகரில் ஆதி முதல் ஒரு பரிசுத்த ஆலயம் இருந்து வந்தது; அது கஃபா வென்றும் அழைக்கப்பட்டுவந்தது. ஆதிகால முதல் இருந்துவந்த அந்தக் கஃபாவானது இப்ராஹீம் நபி (அலை)அவர்களால் பழுது பார்க்கப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது. ஆதியில் அஃது ஒரே ஆண்டவனையே வணங்குவதற்காகவே கட்டப்பட்டதாம்; ஆனல், பிறகு அரபிகள் தங்கள் பல விக்கிரகங்களையும் அதற்குள் வைத்துப் பூஜிக்கத் தொடங்கி விட்டார்கள்.

எனவே, அப் புராதன காலத்தில், அஃதாவது, அந்தக் கி. பி. 6-ஆவது நூற்ருண்டில் அந்த அரபிகளின் நிலைமை மிகப் பொல்லாததாக இருந்துவந்த தென்று இப்பொழுது நாம் நன்கு தெரிந்துகொண்டு விட்டோம்.

# அதிகாரம்—2

## முஹம்மத் நபியின்ஸல் இளமை

அக்காலத்தில் அந்த அரபிகள் ஒரே அரசனின்கீழ்க் குடிமக்களாய் வாழவில்லை; அவர்கள் அனேகம் கூட்டத்தினர்களாகப் பிளவு பட்டுக் கிடந்தனர்; ஒவ்வொரு கூட்டமும் அத்தேசத்தில் ஒவ்வொரு பகுதியைக் கைப்பற்றிக் கொண்டிருந்தது. ஆதலின், அவர்களெல்லாரும் ஒருவரோடொருவர் சமாதானத்துடன் வாழ்ந்துவரவில்லை; ஆனால், அவர்கள் எப்பொழுதும் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொண்டேயிருப்பார்கள்; சிறு சிறு அற்ப விஷயங்களுக்காகவெல்லாம் பெரும் பெரும் யுத்தங்களை யெல்லாம் பல பல தலை முறைகள் மட்டும் நிகழ்த்திக் கொண்டே செல்வார்கள்.

அப்படிப்பட்ட கூட்டத்தார்களுள் குரைஷ் குலத்தார் என்பவர் ஒரு பகுதியினராவர். அவர்கள் ஹிஜாஜ் மாகாணத்தில் வசித்துவந்ததனால், கஃபாவைப் பாதுகாக்கும் கடமையையும் மேற்கொண்டிருந்தார்கள். அக் காரணத்தினால் மற்றெல்லாக் கூட்டத்தாரும் குரைஷிகளிடத்தில் அதிக மரியாதை செலுத்தி வந்தார்கள்.

அந்தக் குரைஷ் குலத்தில் முன்னொரு காலத்தில் அப்துல்லா என்னும் பெயருடையவர் ஒருவர் இருந்துவந்தார். அவர் ஆமினு என்னும் ஒரு தகுதிவாய்ந்த மாதரசியை மணந்து கொண் டிருந்தார். அப்துல்லா ஒரு முறை யதுரிபுக்கு (இது மதீனுவின் புராதனப் பெயர்) யாத்திரை சென்றபோது வழியில் இறந்து விட்டார்; அவருடைய மரணத்துக்கு நான்கு மாதங்களுக்குப் பின் ஆமினுவின் திருவயிற்றில் ஓர் அழகிய ஆண்குழந்தை ஜனனமாயிற்று. அதற்கு முஹம்மத் (புகழப்பட்டவர்) என்று திருநாமமும் சூட்டப்பட்டது.

அக்குழந்தை ஜனனமான இரவில் அனேகம் அற்புதங்கள் நிகழ்ந்தன வென்று கூறப்படுகின்றன. குறிப்பாக அன்றிரவில் பாரசீக தேச மன்னனுடைய அரண்மனை முழுதும் ஆட்டங் கொண்டு, அதன் ஸ்தூபிகளும் இடிந்து விழுந்தன வென்று சொல்லுகிறார்கள். இதனுல் பின்னொருகாலத்தில் முஹம்மத் நபியின்ஸல் சிஷ்யர்கள் அந்தப் பெரிய பாரசீக தேசத்தின் ராஜ்யாதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வார்களென்று முன்னறிக்கை யாகத் தெரிந்து கொள்ளுகிறோம்.

குழந்தை முஹம்மத்ஸல் ஹலீமா என்னும் ஒரு செவிலித்தாயி னிடம் ஒப்படைக்கப் பட்டது; முதல் நான்கு வருஷங்கள் மட்டும் ஹலீ

மாவின் வசமே அக்குழந்தை வளர்ந்து வந்தது. ஹலீமாவின் கூட்டத்தினர் மகா முரடர்; அவர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியாதென்பது நிச்சயம். ஆயினும், ஆதியில் அவர்களுடன் நமது சிறு குழந்தையும் வளர்ந்து வந்து, பின்னொரு காலத்தில் இவ்வுலகினுக்கே மகா பெரிய கீர்த்தி வாய்ந்த மகானென்னும் இணையற்ற மகாத்மாவாக மாறிவிட்டது.

முஹம்மதுக்குஸல் ஆறு வயதாயிற்று; அப்பொழுது ஆமினாவும் இறந்துவிட்டார்; அதனால் அச்சிறுவர் அன்னையும் பிதாவு மற்ற அகதி யானார். அதன்பின் அவர் தமது பாட்டனாரான அப்துல் முத்தலிபின் ஆதரவில் அமர்ந்து விட்டார்; அந்த வயோதிகரும் பிறகு சில வருஷங்களுக்குள் மரணமடைந்து விட்டதனால், அச்சிறுவரை அவரது பெரிய தந்தையான அபூத்தாலிப் என்பவர் ஆதரிக்கத் தொடங்கினார். அவ்விளைஞர் சாதாரண மக்களைப்போல எழுதவும் படிக்கவும் பள்ளிக்கூடம் சென்று கற்றுக் கொள்ளாம லிருந்த போதிலும், பூலோகத்தின் வானலோகத்தின் இரகசிய முழுதையும் மனித ஆசிரியர் இல்லாமலே கற்றுக்கொண்டு விட்டார். ஆதலின், அவருடைய வாழ்க்கையானது ஒரு நூதனமான விசித்திர வாழ்க்கையாகவே காணப்பட்டு வந்தது. அவர் தமது பெயரைக்கூட

எழுதக் கற்றுக்கொள்ளாமலிருந்தும், பின்னொரு காலத்தில் மகா சிரேஷ்டமுள்ள ஜகத்குருவாக மாறிவிட்டார். என்ன ஆச்சரியம்!

# அதிகாரம்—3

## நபிபிரானின் பால்யம்

முஹம்மத்ஸல் தமது பழக்க வழக்கங்களில் அதிக சாதாரணத் தன்மையுடையவராய் இருந்து வந்தார்; ஆதலின், அவரது வாலிப வாழ்க்கையானது மற்றெல்லா ஏழைப் பிள்ளைகளின் வாழ்க்கையைப் போலவே இருந்து வந்தது. அவர்களைப் போலவே இவர்களும் ஆடு மேய்க்கக் கூடிய தொழிலையே மேற்கொண் டிருந்தார்கள். தங்கள் சாதாரண உயிர் வாழ்க்கையைக் கொண்டு, தாழ்மையான வேலைகளைச் செய்வதிலும் ஒன்றும் குறையில்லை யென்னும் உயரிய படிப்பினையையும் நமக்குக் காண்பித்துக் கொடுத்திருக்கிறார்கள். வியாபாரத்தின் நிமித்தம் ஷாம் (ஸீரியா) முதலிய தேசங்களுக்கும் சென்று வந்தார்கள்.

முஹம்மத்ஸல் மெய்யையே எப்பொழுதும் பேசுகிறவராகவும், உண்மையான உயரிய ஒழுக்

கம் நிறைந்தவ ராகவும் இருந்து வந்தார் ; ஆத லின், ஒவ்வொருவரும் அவரை முற்றிலும் நம்பி வந்தார். ஜனங்கள் அடிக்கடி அவரிடத்தில் பணம், காசு முதலிய வேறு பொருள்களையும் பாதுகாப்புக்காகக் கொடுத்து வைப்ப துண்டு; முஹம்மத்[ஸல்] அவற்றை எப்பொழுதும் பத்திர மாகவே திருப்பிக் கொடுப்பது வழக்கம். இதற் காகவும், இதுபோன்ற இன்னும் பல காரணங் களுக்காகவும் அவரை எல்லோரும் அல் அமீன் என்று அழைத்து வந்தார்கள்.—இப் பெயரின் பொருள் "நம்பிக்கைக் குரியவர்" என்பதாகும். அவர் பால்ய முதல் அதிக புத்திசாலியாகவும் இருந்துவந்தார்; அவர்களுடைய புத்திக்கூர்மை யைப்பற்றி இங்கொரு சம்பவத்தைக் கூறலாம்: ஒரு முறை மக்கத்திலுள்ள குரைஷிகள் கஃபா வென்னும் தேவாலயத்தைப் பழுது பார்த்துக் கொண் டிருந்தார்கள் ; அப்பொழுது ஹிஜாஜி லிருந்த எல்லாக் கூட்டத்தினரும் அதற்கு உதவி செய்துகொண் டிருந்தார்கள். அதுகாலை "ஹஜ ருல் அஸ்வத்" என்னும் பரிசுத்தக் கருப்புக் கல்லை அதற்குரிய சரியான இடத்தில் பதிப்பிக்க எத்தனித்தார்கள். அப்பொழுது அந்த அரபி களின் ஒவ்வொரு கூட்டத்தாரும் அதைத் தாமே பதிப்பிக்க வேண்டுமென்று போட்டிபோட்டுக் கொண்டார் ; அதனால், அதன் சார்பாய் அவர்க

ளுக்குள் ஒரு பெரிய சண்டையும் விளையும்போல் இருந்தது. அப்பொழுது, கஃபாவை நோக்கி மறு நாட் காலையில் முதலில் விஜயம் செய்பவரே அக் காரியத்தை முடிவு செய்ய வேண்டுமென்று தங்க ளுக்குள் தீர்மானித்துக் கொண்டார்கள். அவ் வாறே முதலில்மறுநாட் காலையில் அவ்விடத்திற்கு விஜயம் செய்தவர் முஹம்மத் நபியேஸல் ஆவார். அப்பொழுது, "இந்தக்கல்லை யார் எடுத்துப் பதிப் பிப்பது?" என்று அவர்கள் முஹம்மதைஸல்க் கேட்டார்கள்; அதைக் கேட்டு, "இந்தத் துணி யின் மீது அந்தக் கல்லை வைத்து, எல்லோரும் இதன் ஓரத்தைப் பிடித்துக் கொண்டு கிளப்புங் கள்," என்று நமது வாலிபர் யோசனை கூறினார். அதைக் கேட்டு அவர்களெல்லோரும் திருப்தி யடைந்தார்கள்; ஆதலின், அவ்வண்ணமே அவர்கள் அக்காரியத்தைச் செய்து முடித் தார்கள்.

இவருக்கு வயது இருபத்தைந்தானபோது, கதீஜாரலி என்னும் பெயருடைய ஒரு தனிக வர்த்தகப் பெருமாட்டி முஹம்மதின்ஸல் பேரைப்பற்றி அதிகம் கேள்விப்பட் டிருந்தார் கள்; அம்மாது ஒரு பெரிய தனவந்தர் வீட்டு விதவையா யிருந்தார். அவருடைய ஆட்கள் அடிக்கடி ஷாம் தேசத்துக்கு வியாபாரத்தினிமித் தம் செல்வது வழக்கம். முஹம்மத்ஸல் தம்மு

டைய காரியங்களை யெல்லாம் அதிக அழுத்தம் திருத்தமாகச் செய்து வந்ததனால், கதீஜா அம்மாள் அவரது கீர்த்தியைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தார்கள். பிறகு சீக்கிரம் அவ்விருவரும் ஒருவரோடொருவர் மனமுவந்து மணம் முடித்துக் கொண்டார்கள்.

# அதிகாரம்—4

## முஹம்மத்[ஸல்] நபி ஆனார்

நம் முஹம்மதுக்கு[ஸல்] வயது நாற்பதாயிற்று. அவர் பால்ய முதல் ஹிரா என்னும் மலைக்குகைக்குள் தனியே சென்று தவம் புரிவது வழக்கம். அவ்விடத்தில் இருந்து கொண்டு ஆண்டவனைப் பற்றியும், அவனுடைய சிருஷ்டி ரகசியங்களைப் பற்றியும் சதா தியானம் புரிந்துகொண்டிருப்பார்கள். ஒருநாள் இரவில் ஜிப்ரீல் (அலை) என்னும் பெயருடைய வானவர் ஒருவர் அவர் முன் தோன்றி, "ஓ முஹம்மதே! ஓதுவீராக!" என்று வேண்டினார். "எனக்கு ஓதத்தெரியாது!" என்று முஹம்மத்[ஸல்] விடை கொடுத்தார். அப்பொழுது அந்த வானவர் அவரை இறுகத் தழுவினார்; இவ்வாறு மூன்றுமுறை செய்ததன்பின் அந்த வானவர்

இந்த ஐந்து (குர்ஆன், அத்தியாயம் 96, முதல் ஐந்து) திருவாக்கியங்களையும் ஓதிக் காண்பித்தார்; அவையாவன: "படைத்த உம்முடைய நாயன் திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக; மனிதனை உதிரக் கட்டியினின்றும் படைத்தான். ஓதுவீராக; உம்முடைய நாயன் மகா கண்ணியமுள்ளவனுயு மிருக்கிறுன்; எழுதுகோலைக் கொண்டு (எழுதக்) கற்பித்தவன்; மனிதனுக்கு அவன் அறியாம லிருந்ததை அறிவித்தவன்." உடனே முஹம்மத்ஸல் அந்த வானவரின் திருவாக்கியங்களை அப்படியே ஒப்பித்தார். இவ்வாறுக அவர் ஆண்டவனைப் பற்றியும், வானத்தைப் பற்றியும், பூமியைப் பற்றியும், இன்னும் இவற்றிலுள்ள எல்லாவற்றைப் பற்றியும் மிக நன்ருகத் தெரிந்து கொண்டார்.

முதன்முதலில் அந்த வானவரைக் கண்டதனுல் முஹம்மதின்ஸல் மனம் சிறிது அச்சத்தால் தடுமாற்றமுற்றது. அவர் உடனே தம் இல்லம் சென்று, மனைவியரிடம் தாம் கண்டதையும் கேட்டதையும் விவரித்துக் கூறினுர். அம்மாது தமது உறவினர் ஒருவரிடம் முஹம்மதைஸல் அழைத்துச் சென்று, அவர்முன் நிகழ்ந்ததை யெல்லாம் கூறினுர். அவ்வயோதிகர் பைபிள் முதலிய யூத கிறிஸ்தவவேதங்களில் மிக்கபாண்டித்தியம்பெற்றிருந்தார். அவர் முஹம்மதைஸல் நோக்கி, "நீர்

ஆண்டகையின் தூதரான வானவர் ஜிப்ரீலின் வசனத்தைக் கேட்டிருக்கின்றீர்; நீர் அல்லா(ஹ்)வின் திருத்தூதராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றீர்,” என்று கூறினார். கதீஜா[ரலி] அதை முழுதும் நம்பினார். ஏனெனின், அவர் தமது கணவரின் மேன்மையை மிகவும் நன்கறிந் திருந்தார்; இதனால் கதீஜாவே[ரலி] முதன்முதலில் முஸ்லிமாக ஆய்விட்டார்.

பிறகு அந்த வானவர் அடிக்கடி முஹம்மத்[ஸல்] நபியிடம் விஜயம் செய்து கொண்டிருந்தார்; அவர் அந்த நபிக்குத் தொழுகை, நோன்பு, தானதருமம் முதலிய எல்லா நற்காரியங்களையும் சிறுகச்சிறுகக் கற்றுக் கொடுத்தார். அதன்பின் முஹம்மத்[ஸல்] நபியின் பேரும் பெருமையும் அத்தேசமுழுதும் நன்றாகப் பரந்தோங்கின. தொலை தூரத்தி லிருந்தெல்லாம் மனிதர்கள் வந்து அவருடைய திரு உபதேசங்களைக் கேட்கலாயினார். அவர்களுள் அனேகம்பேர் அவரை இறுதி நபியாகவும், தங்களுடைய ஞான குருவாகவும் ஏற்றுக்கொண்டார்கள். அவருடைய முதன்மையான சிஷ்யர்களுள் அபூபக்ர்[ரலி], உமர்[ரலி] என்பவர்களும், உதுமான்[ரலி], அலீ[ரலி] என்பவர்களும் தலைசிறந்து விளங்கினார்கள். இந்நால்வரும் இஸ்லாத்தின் பழைய சரித்திரத்தில் முக்கியமான கலீபாக்களாய்க் காணப் படுகிறார்கள்.

# அதிகாரம்—5

## மக்காவின் வாழ்க்கை

முஹம்மத் நபி(ஸல்) அவர்களால் இவ்வுலகினருக்கெல்லாம் உபதேசிக்கப் பட்டு வந்த சத்திய சன்மார்க்கத்துக்கு இஸ்லாம் என்று பெயர் சொல்லப்படும். (இதை முஹம்மதியமார்க்கம் என்பது தவருன வழக்கமாகும்.) இது மகா சத்திய சீலம் பொருந்திய மிக்க நல்ல இணையற்ற ஏகதெய்வ மார்க்கமாகும். ஏனெனின், ஏகதெய்வக்கொள்கை யென்பதே இதன் மூலக்கொள்கை யாகும்; இவ் வுண்மையை உலகினருக்கு உபதேசித்துத் தந்த முஹம்மத் நபி(ஸல்) அவர்களே அந்த ஏகநாயகனுல் அனுப்பப்பட்ட திருத்தூதரென்றே நாம் ஒப்புக்கொள்ளுகிருேம். ஆதலின், ஆண்டவனை ஒருவனைத் தவிர்த்து இப்பிரபஞ்சத்தில் வேறு தெய்வம் இல்லையென்பதும், முஹம்மத்(ஸல்) அவனுடைய திருநபி யென்பதுமே இஸ்லாத்தின் முதல் கொள்கையாகும். விக்கிரகவணக்கம் மிகப் பொல்லாததேயாம். நாம் எல்லா மனிதர்களையும் அன்புடன் ஆதரித்து நடத்திவருதல்வேண்டும்; ஏழைகள்பால் இரங்குதல் வேண்டும்; அகதிகளுக்

கும், ஆற்றமாட்டாதவர்களுக்கும் அன்னமளித்து ஆதரவளித்தல் வேண்டும்; நோயாளிகளைப் பக்ஷத்துடன் பராமரித்தல் வேண்டும். நாம் பொய், சூது, கொலை, களவு, கள்ளுண்ணல், காமப்பேய் கொள்ளல் முதலிய கொடிய பாதகங்களிலிருந்து முற்றிலும் விலகியிருத்தல் வேண்டும். எவருக்கும் கனவிலும் தீங்கிழைத்தல் கூடாது. நாம் பெண்பாலாரை அதிக கண்ணியத்துடன் நடத்திவரல் வேண்டும்; அவர்களுக்கு நல்ல கல்வியும் போதித்து வைத்தல் வேண்டும். மதுபானம் செய்வதும், மாதராட லென்னும் மகா பொல்லாத பாதகமும் இவ்வுலகில் அறவே ஒழிக்கப்படல் வேண்டும்.

ஆனல், அக்காலத்தி லிருந்த அரபிகள் மகா பொல்லாதவர்களா யிருந்தார்களல்லவா? ஆதலின், அன்னவர் தங்களுடைய தீயவழிகளைச் சற்றும் விட்டுவிட மனமிணங்காதவர்க ளாய் மிக்க பிடிவாதத்துடன் வாழ்ந்து வந்தார்கள். எனவே, அவர்கள் தங்களுடைய மூடப் பிடிவாதத்தால் முஹம்மத்நபி[ஸல்] அவர்கள்பால் காணப்பட்ட நல்ல குணங்களையெல்லாம் சிறிதும் கவனியாது, அவர்களையும், அவர்களுடைய உபதேசங்களையும் இவ்வுலகத்தில் இல்லாமல் ஒழித்துவிட மிகமூர்க்கத்தனமாய்ச் சூழ்ச்சிசெய்ய லாயினர்கள்: அவர்கள் நம் நபிகள் நாயகத்தை[ஸல்] ஒரு சூன்யக்கார

ரென்றும், பொய்யரென்றும் வசைமொழி கூறி அழைக்கத் தலைப்பட்டனர்; அவர்கள் அந்தத் திருநபியைக் கல்லாலும் கட்டையாலும் அடித்துத் துன்புறுத்தினுர்கள்; அவர்களுடைய திருமேனியின்மீது மண்ணையும் சாணத்தையும் வாரியிறைத்தார்கள். இம்மட்டோடு நில்லாமல் அவர்களை உயிருடன் குத்திக் கொன்றுவிடவும் அம் மக்கத்துக் காபிர்கள் தீர்மானித்துவிட்டார்கள். நபிகள் பிரானைத் தங்களுடைய தொழுகையையும் தொழ விடாமல் துன்புறுத்தி வந்தார்கள்.

அவ்வளவோடு நில்லாமல் அந்தத் திருநபியவர்களின் அருமைச் சிஷ்யர்களும் அவ்வெதிரிகளால் அளவுகடந்த துன்பத்திற் கெல்லாம் ஆளாக்கப் பட்டனர். அவர்களுள் சிற்சிலரை அந்த அஞ்ஞான அரபிகள் கயிற்றைக்கொண்டு கைகால்களை இறுகத் தளைத்து வேகின்ற வெயிலில் கொதிக்கின்ற மணல்மீது கோரமாகக் கிடத்தி, இனியில்லா வகையா லெல்லாம் அவஸ்தைப்படுத்தி வந்தார்கள்; அப்படிப்பட்ட அவஸ்தையிலிருக்கும் அடியார்களுக்கு உண்ணவும் பருகவும் ஒன்றும் கொடாமல் அவ்வெதிரிகள் துன்புறுத்திவந்ததனுல், அவர்களுள் பலர் அக்கொடுமைகளை யெல்லாம் சகிக்க மாட்டாது, தமது ஆருயிரையும் அலறி விட்டனர். அவர்களுடைய கொடிய துன்பமானது அத்துணைக் கடுமையாக

இருந்துவந்தும், அம்முஸ்லிம்கள் தமது உயிரைக்கொடுக்கத் துணிந்தபோதிலும், தங்கள் மனத்தின் கண் வேரூன்றி யிருந்த இஸ்லாத்தின் உறுதியைமட்டும் ஒரு சிறிதும் விட்டுக்கொடுக்கச் சம்மதித்தார்க ளில்லை. நாளுக்குநாள் அவர்களுடைய கஷ்டங்களும், நிஷ்டூரங்களும் அளவுக்கு மேல் அதிகரித்துக் கொண்டே போயின. இறுதியில் எதிரிகளின் கொடுமை சகிக்கக்கூடாத எல்லைக்குள் சென்று விட்டதனுல், ஆதி முஸ்லிம்களுள் ஒருதொகுதியினர் அபிஸ்ஸீனியா (ஹபஷ்) என்னும் ஆபிரிக்கா கண்ட தேசத்துக்குள் சென்று அடைக்கலம் தேடிக்கொண்டு, அங்குச் சுகமே வாழட்டுமென்று நம் திருநபியவர்கள்[ஸல்] அனுமதி கொடுத்து விட்டார்கள்.

இப்படிப்பட்ட துன்பங்கள் பல நிகழ்ந்தும், நம் நபிகள் திலகம்[ஸல்] மட்டும் ஒரு சிறிதும் மனந்தளராது தங்களுடைய "சாந்தி மார்க்கத்தை" அடிக்கடி அம்மனிதர்களுக்கு ஓயாமல் உபதேசித்துக் கொண்டே வந்தார்கள். முஹம்மத் நபிக்கு[ஸல்] "லஞ்சம்" கொடுத்தேனும் அன்னவரின் வாயை அடக்கிவிட வேண்டுமென்று அவ்வரபிகளின் தலைவர்கள் அதிகம் பாடுபட்டுவந்தார்கள். எனவே, அவர்க ளனைவர்களும் திரண்டு சென்று, நபிகள் நாயகத்தை நோக்கி, "நாங்கள் உமக்கு ஏராளமான ஐசுவரியமும், பூஸ்திதியும்

கொடுக்க விரும்புகிறோம்; நீர் மட்டும் உம்முடைய ஏகதெய்வ வணக்கத்துக்குரிய போதனையை அடியோடு விட்டொழித்தல் வேண்டும். அவ்வாறுயின், நாங்கள் உம்மை எங்களுடைய அரசனாகவும் ஆக்கிக்கொள்ளச் சம்மதிக் கின்றோம்," என்று வேண்டிக் கொண்டார்கள். ஆனால், நந் திருநபியவர்கள்ஸல் அதற்குச் சிறிதும் சம்மதிக்கவில்லை. அவர்கள் தங்களுடைய கடமையில் ஒரு சிறிதும் பின்வாங்காமல் பெருமுயற்சியுடன் அதிகம் பாடுபட்டு வந்தார்கள்.

அதைக் கண்டு அந்த அராபிக் காபிர்கள் அதிக அதிருப்தி யடைந்துவிட்டார்கள். அதன் பின் அவர்கள் நபிபெருமானின் பெரிய தந்தையாகிய அபூத்தாலிபிடம் சென்று, "உம்முடைய தம்பி மகனை எங்கள் தெய்வங்களைத் தூஷிக்காமலிருக்கும்படி அடக்கி வைப்பீராக; இன்றேல், அவருக்குப் பெருந்தீங்கு விளைந்திடுதல் கூடும்," என்று பயமுறுத்தாட்டினார்கள்.

அபூத்தாலிப் அந்தக் காட்டரபிகளிடம் அதிகம் அஞ்சிக்கொண் டிருந்ததனால், எப்படியாவது தமது தம்பி மகனை அவர்களுடைய பகைமையினின்றும் தீர்த்துவைக்கப் பிரயத்தனப் பட்டார். ஆதலின், அவர் நபிபிரானிடம் சென்று, "அவர்களுடைய பழைய விக்கிரகங்களைப்பற்றி நீர் ஒன்றும் தூஷணை செய்ய வேண்டாம்; ஏனெனின்,

இனி என்னுல் உம்மை அவர்களுடைய கையி னின்றும் தப்பவைப்பது முடியாது. ஆதலின், உம்முடைய இந்தப் பிரசாரத்தை அடியோடு விட்டுவிடுதல் நலமாகும்," என்று வேண்டிக் கொண்டார். அதற்கு நபிகள் நாயகம்ஸல் அப் பெரிய தந்தையாரை நோக்கி, "இம்மனிதர்கள் சூரியனைக் கொண்டுவந்து என் வலக்கரத்தில் வைக்கட்டும்; சந்திரனைக் கொண்டுவந்து என் இடக்கரத்தில் வைக்கட்டும். அப்பொழுதும் நான் என்னுடைய சத்தியவேலையை மட்டும் கைவிட மாட்டேன்," என்று தங்கள் நேத்திரங்கள் இர ண்டிலும் நீர்ததும்ப மிக்க உருக்கத்துடன் மறு மொழி கூறினுர்கள். அதைக் கேட்டு அபூத்தா லிப் அந்தத் திரு நபியவர்கள் கொடுத்த தைரிய மான விடையைக்கேட்டு, அன்னவரின் தீரத்துக் காக மெச்சி, "நன்று, நன்று! உம்முடைய விருப் பம்போல் பிரசாரம் புரிந்து வருவீர். இனி இந் நல்ல வேலையில் உம்மை ஒருவரும் துன்புறுத்தத் துணியார்," என்று உற்சாக மூட்டிச் சென்ருர்.

அதன்பின் நம் ரசூல் நாயகமவர்கள்ஸல் தங் கள் எதிரிகளின் கையில் அளவற்ற துன்பங்களை யெல்லாம் சகித்து வந்தார்கள். நபிகள் திலகம்ஸல் எத்துணைக் கெத்துணைப் பொறுமையுடன் எதிரி களின் சேஷ்டைகளை யெல்லாம் சகித்து வந்தார் களோ, அத்துணைக்கத்துணை அவ்வெதிரிகளும்

தங்களுடைய கொடுமைகளை யெல்லாம் பன்மடங்கில் பெருக்கிக் கொண்டே சென்றார்கள். அந்த அரபிகள் அவர்களைத் தங்கள் ஜாதியைவிட்டுச் சிலகாலம் விலக்கியும் வைத்தார்கள்; இப்படிப் பட்ட பல தொல்லைகளால் அம்மனிதர்கள் அல்லா(ஹ்)வின் திருத்தூதரைத் தங்கள் இல்லத்தினின்றும் வெளியில் தலைகாட்ட முடியாமலும் செய்து விட்டார்கள். அதன்பின் அந்தத் திரு நபியவர்களைக் கொன்று விடவும் இறுதியாகத் தீர்மானித்து விட்டார்கள்.

# அதிகாரம்—6

## சதியாலோசனை

நபிகள் நாயகத்தின் ஸல் பெரிய தந்தையான அபூத்தாலிப் எப்பொழுதும் தமது தம்பியின் செல்வக் குமாரருக்கு உதவி புரிந்தே வந்தார்; எவராலும் அந்தச் செல்வப்புத்திரருக்கு யாதொரு விதமான தீங்கும் வாராமல் பாதுகாத்தும் வந்தார்கள். ஆனால், அபூத்தாலிப் இறந்து போனபின் அபூஸுப்யான் என்பவரே மக்காவி லிருந்த குரைஷிகளுக்குத் தலைமை வகிக்கலானார். ஆயி

னும், அபூஸுப்யான் விக்கிரக ஆராதனையே புரிந்து கொண்டிருந்தார். ஆனால், அப்படிப் பட்ட விக்கிரக ஆராதனைதான் கூடாதென்று நம் நபிகள் நாயகம்ஸல் உபதேசம் புரிந்து வந்தார்கள். இதனால் அபூஸுப்யான் நபிகள் பிரானைஸல் அதிகம் வெறுக்கத் தலைப்பட்டார். ஆதலின், இஸ்லாத்தின்மீது பகைமை கொண்டிருந்த குரைஷிகளெல்லோரும் அபூஸுப்யானின் வீட்டில் ஒருநாள் கூடிக்கொண்டு முஹம்மதைஸல் இனி என்ன செய்வதென்று ஆலோசிக்கத் தொடங்கினார்கள்:—

"அவனை ஒரு சிறைக் கூடத்துக்குள் வைத்துப் பூட்டிவிட வேண்டும்; வெளியில் விடவே கூடாது. அவன் அங்கேயே கிடந்து மடியட்டும்," என்று ஒருவன் கூறினான்.

"வேண்டாம்; அவ்வாறு செய்ய வேண்டாம். சிறைச்சாலையில் அடைப்பது பத்திரமாகாது. அவன் தன் சிறையினின்றும் தப்பிக் கொண்டு வந்து நம்மையெல்லாம் மீண்டும் துன்புறுத்தக் கூடும்." என்று மற்றொருவன் கூறினான்.

"அவனை அரப் தேசத்துக் கப்பால் துரத்திவிடவேண்டும். மறுபடியும் அவன் திரும்பிவராவண்ணம் எல்லையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்," என்று வேறொருவன் ஆலோசனை கூறினான்.

"இஃதொரு நல்ல யோசனை யன்று; இவனை அரப் தேசத்துக் கப்பால் அனுப்பி விடுவோமாயின், இவனுல் ஆங்காங்குள்ள மற்ற மனிதர்களெல்லாரும் கெட்டு விடுவார்கள்," என்று மற்றுமொரு மடயன் மறுமொழி கூறினுன்.

"அப்படியாயின், அவனைக் கொன்று விடுங்கள்! அவனை வேறு எவ்வழியாலும் தொலைப்பது முடியாது," என்று இன்னுமொரு யூகசாலி கோபமாகக் கூறினுன்.

"இதுதான் நல்ல யோசனை. ஆனுல், யார் அவனைக் கொல்வது?" என்று அபூஸுப்யான் அதிக அவசரமாக வினவினுர்.

அதைக் கேட்டு எல்லோரும் மௌனமாயிருந்தார்கள். ஏனெனின், முஹம்மதைக்ஸல் கொல்வதில் ஒரு பெரிய ஆபத்தானது தலைக்கு மேல் வந்து விடியுமென்பதை அவர்களெல்லோரும் நன்கறிந் திருந்தார்கள். நபிகள் பிரான்ஸல் ஹாஷிம் வம்சத்தைச் சேர்ந்தவர்களா யிருந்தார்கள். ஆதலின், அவர்களைக் கொல்வதானது அந்த ஹாஷிம் வம்சத்தாரின் முழுப் பகைமையையும் அடியோடு கிளப்பி விடுவதாகுமென்று அவர்கள் அஞ்சினுர்கள். ஹாஷிம் குலத்தார் நபிகள் நாயகத்தைக் கொன்றவனைக் கண்டு பிடித்து, பதிலுக்கு பதிலாகக் கொன்று விடுவார்கள். இத

ஞல் அரப்தேசமுழுதும் ஒரு பெருங்கிளர்ச்சியும், யுத்தப்பிரவாகமும் மூண்டுவிடுதல் கூடும்.

ஆதலின், இறுதியில் அவர்கள் இவ்வாறு யோசனை செய்தார்கள்: அரப்தேசத்திலிருந்த ஒவ்வொரு கோத்திரத்தாரும் ஒவ்வொரு பிரதிநிதியைப் பொறுக்கி யெடுத்தல் வேண்டும். அவர்களெல்லாரும் ஒன்றுசேர்ந்து நபிகள்பிரானை ஒரே மூச்சில் குத்திவிட வேண்டும். எல்லோரும் ஏக காலத்தில் தங்கள் வாளாயுதங்களை அவருடைய தேகத்திற்குள் சொருகி, அப்பொழுதே கொன்றுவிடவேண்டும்; இப்படிச் செய்வதால் எல்லாக் கோத்திரத்தாரும் அந்தப் படுகொலைக்கு உத்தரவாதியாய் விடுவார்கள். அப்பொழுது ஹாஷிம் குலத்தார் அந்நாட்டிலுள்ள எல்லாக் கோத்திரத்தாருடனும் ஏக காலத்தில் யுத்தம் புரிவது முடியாது, என்று தங்களுக்குள் தீர்மானம் பண்ணிக் கொண்டார்கள்.

எனவே, எல்லாக் கோத்திரத்தார்களும் தத்தமக்குரிய ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்தார்கள். ஒருநாள் இரவில் அவர்களெல்லோரும் நபிகள் நாயகத்தின்ஸல் தெருவாயிற்படி யருகில் வந்து ஆயத்தமாக உட்கார்ந்து கொண்டார்கள்; அன்றிரவே நபிகள்நாதரைக்ஸல் கொன்றுவிட வேண்டுமென்றும் தீர்மானித்துக் கொண்டார்கள். இறைவனருளால் நபிகள் பிரான்ஸல் அவர்களுடைய

அதி பயங்கரமான சூழ்ச்சியை மகாசூக்ஷுமமாக அறிந்து கொண்டார்கள். ஆதலின், உடனே மக்காவைவிட்டு மதீனுவுக்குப்புறப்பட்டுச் சென்று விடுவதென்று தீர்மானித்துக் கொண்டார்கள். மதீனுவானது அக்காலத்தில் யதுரிபென்று வழங்கப்பட்டு வந்தது. அந்நகரிலுள்ள மனிதர்கள் அடிக்கடி மக்காவுக்கு வந்து செல்வதுண்டு. அவ்வாறு மக்கமா நகருக்கு விஜயம் செய்த போது, மதீனுவாசிகள் நம் நபிகள்பெருமானைஸல் அடிக்கடி சந்தித்ததுமுண்டு. அதன் பயனுய்ச் சிற்சில மனிதர்கள் தீனுல் இஸ்லாத்தையும் தழுவியிருந்தார்கள்; அந்த முஸ்லிம்கள் தங்கள் நகரிலும் இம்மார்க்கத்தைப் பரப்பினுர்கள். இதனுல் அச்சமயத்தில் சுமார் ஐந்நூறு மனிதர்கள் யதுரிபில் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்திருந்தார்கள். அவர்களெல்லோரும் தங்களுடன் வந்து தங்கிவிடும்படி நபிகள் நாயகத்தைஸல் அடிக்கடி வேண்டிக் கொண்டார்கள்.

ஆதலின், நபிகள் பிரானும்ஸல் அன்றிரவு தங்கள் விடுதியை விட்டு வெளியில் புறப்பட்டார்கள்; அவர்களைக் கொல்ல வந்திருந்த எதிரிகளெல்லோரும் கடவுள் சோதனையால் நன்ருக மயங்கிக் கிடந்ததனுல், அவர்கள் ஒருவரும் நபிகள் நாயகத்தைக் கண்டு கொள்ள வில்லை. ஆனுல், அபூபக்ர்ரலி மட்டும் நபிகள் பெருமா

னுடன் சேர்ந்து கொண்டு, இருவரும் யதுரிபை நோக்கிப் புறப்பட்டார்கள்.

அபூத்தாலிபின் குமாரரான அலீ ரலி மட்டும் நபிகள் பிரான் ஸல் மீது அளவற்ற விசுவாசமுள்ளவர்களா யிருந்தார்கள். இவர்களே அவ்விருவரும் புறப்பட்டுச் சென்றபின் நபிகள் பிரானின் படுக்கையில் அதிக தைரியமாய்ப் படுத்துக் கொண்டார்கள்; அவர்களுடைய துணிமணிகளும் இவர்கள்மீது போர்த்தப்பட் டிருந்தன.

அவர்களிருவரும் வெளியேறிச் சென்றபின் அந்தக் கொலை பாதகர்கள் உள்ளேசென்று பார்த்தார்கள்; அந்தப் படுக்கையின்மீது ஒருவர் படுத்துக்கிடந்தார். அவரைக் கண்டவுடன் அவர்கள் தங்கள் உடை வாட்களை உருவிக்கொண்டு அந்தப் படுக்கையி னருகே சென்று முஹம்மதைக் ஸல் கொல்ல ஓங்கினார்கள்; அப்பொழுது அவர்கள் அம்மனிதன்மீது போர்த்தப் பட்டிருந்த துணிகளை நீக்கிப் பார்த்தார்கள். அங்கே முஹம்மத் ஸல் காணப்படவில்லை; ஆனால், அவர் அலீ ரலி யாகக் காணப்பட்டார்.

இவ்வாறு அலீ ரலி அவர்கள் நபிகள் நாயகத்தின் ஸல் புறப்பாட்டுக்கு உதவி புரிந்தார்கள். அப்பொழுது குரைஷிகளுக்கு ஒன்றும் புலப்படவில்லை. அவர்கள் அலீ ரலியைக் கொன்று விடுவார்களோ? அவர் ஒரு வாலிபராகவும், பக்திமா

னாகவும் விளங்கினார்; எல்லாக் குறைஷிகளும் அவர்மீது அதிகமான அபிமானம் பாராட்டி வந்தார்கள். ஆதலின், அவரைக் கொல்லாமல் சும்மாவிட்டு விட்டார்கள்.

இதற்குள் நபிகள்பிரானும்[ஸல்] அபூபக்ரும்[ரலி] யதுரிபை நோக்கிச் சிறிது தூரம் நடந்து சென்றார்கள். சூரியோதயகாலம் ஆனவுடன் அங்கிருந்த ஒரு மலைக் குகைக்குள் சென்று தங்கிவிட்டார்கள். அதன் பெயர் தௌர் என்பதாகும்; அதற்குள் அவர்கள் மூன்றுநாள் மட்டும் தங்கி யிருந்தார்கள். பிறகு வெளிப்பட்டுச் சென்றார்கள்.

## அதிகாரம்—7

### ஹிஜ்ரத்

நபிகள் நாயகம்[ஸல்] மக்காவை விட்டு வெளிப் புறப்பட்ட மறுநாட் காலையில் தங்களுடைய எதிரியானவர் ஊரை விட்டுத் தப்பியோடி விட்டதை அவ்வூரார் அறிந்துகொண்டார்கள். அவர்களுடைய தலைவர்கள், "அவனைக் கண்டு பிடியுங்கள்! அவனை எங்களிடம் கொண்டு வாருங்கள்! நாங்கள் உங்களுக்கு 200 ஒட்டகங்களும், 400 திர்ஹம் நாணயமும் இனாமாக கொடுத்துப் பணக்

காரர்களாகச் செய்வோம்!" என்று கூறினார்கள்.

அங்குள்ள பொதுமக்களெல்லாரும் பெரும்பாலும் ஏழைகளாகவே இருந்து வந்தார்கள்; ஆதலின், அவர்கள் அந்த வெகுமதியை நன்கு மதித்தார்கள். எனவே, அவர்கள் வெளியில் புறப்பட்டுச்சென்று ஒவ்வோரிடத்திலும் முஹம்மதைத்ஸல் தேடிப் பார்த்தார்கள்; ஆனால், அவர்களால் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஒரு சமயம் அவர்களுக்குள் சிலர் தௌர் என்னும் குகையருகில் நெருங்கினார்கள்; அதற்குள் நபிகள் நாயகம் இருக்கிறார்களோ வென்பதைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு எட்டிப் பார்க்கவும் எண்ணினார்கள். அப்பொழுது அவர்கள், அக்குகையின் வாயிலில் நூலிழைப் பூச்சிகள் நூல் நூற்றிருப்பதையும், அவ்விடத்தில் புறாவின் கூடொன்று அதன் முட்டையுடன் காணப்படுவதையும் கண்டு கொண்டார்கள்.

"இப்படிப்பட்ட பழைய பாழடைந்த குகைக்குள் எவரும் புதிதாய் நுழைந்திருப்பது முடியாது! இதற்குள் ஒருவரும் இருக்க மாட்டார். ஆதலின், இதை எட்டிப் பார்ப்பதில் பிரயோஜன மில்லை," என்று ஒருவன் சொன்னான்.

"ஆமாம். இதற்குள் எட்டிப் பார்ப்பதால் ஒரு பிரயோஜனமும் விளையப் போவதில்லை. நாம் வேறோரிடம் சென்று தேடிப் பார்ப்போம்!"

என்று மற்றொருவன் சொன்னான். உடனே இருவரும் அந்தக் குகை வாயிலை விட்டு அப்புறம் சென்று விட்டார்கள்.

வெளியிலிருந்து அவர்கள் பேசிக்கொண்டிருந்ததை அபூபக்ர்ரலி கேட்டுக் கொண்டிருந்தார்; உடனே அவர் திகில் கொண்டு விட்டார்.

"நாம் இப்பொழுது என் செய்வோம்? இப்பொழுதே நாம் எதிரிகளிடம் அகப்பட்டுக் கொள்வோம். நாம் இருவர் தாமே இருக்கின்றோம்!" என்று அவர் நபிகள் பிரானைஸல் நோக்கிக் கூறினார்.

அதற்கு நபிகள் பெருமான் என்ன பதில் கூறினார்கள்? "நாம் இருவராயிருக்கவில்லை; நம்முடன் இன்னுமொருவன் இருக்கிறான். அவன் யார் தெரியுமா? அவன்தான் அல்லா(ஹ்). அவனொருவன் நம்முடன் இருக்குமட்டும் நீர் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்," என்று தைரியம் கூறினார்கள்.

அவ் வண்ணமே ஆண்டவனும் அவர்களுடன் இருந்து வந்தான். பிறகு நபிகள் நாயகமும்ஸல் அபூபக்ரும்ரலி அந்தக் குகையை விட்டு க்ஷேமமாக வெளியில் புறப்பட்டார்கள்; அதன் பின் யதுரிபை நோக்கிச் சென்றார்கள்; இறுதியில் அவ்விருவரும் அந்நகரத்தை நெருங்கிச்

சென்று விட்டார்கள். அப்பொழுது அங்குள்ள எல்லா மனிதர்களும் திரண்டு வந்து தக்க மரியாதையுடன் அவர்களை எதிர்கொண் டழைத்துச் சென்றார்கள்.

"அவர் வந்துவிட்டார்! அவர் வந்துவிட்டார்!" என்று அவர்க ளெல்லோரும் குதூகலத்தால் கூச்ச லிட்டார்கள். சிறுவர்களும் சிறுமிகளும் ஆனந்தத்தால் தாண்டவ மாடினார்கள். அவர்கள் தங்கள் விருந்தினரைக் கண்டு பாடல்களால் பாடிப் புகழ்ந்தார்கள். நபிகள் நாயகம்[ஸல்] ஓர் ஒட்டகத்தின்மீது சவாரி செய்தவராய் அந்நகருக்குள் நுழைந்து சென்றார்கள்; அவர்களுக்குப்பின் பெருந்தொகுதியான மனிதர்கள் திரண்டு வந்தார்கள். எல்லோரும் சந்தோஷ சாகரத்துள் மூழ்கியவர்களாய்க் காணப்பட்டார்கள். அவர்கள் பேரீச்ச மரத்தின் மட்டைகளை எடுத்துக்கொண்டு அவருக்குக் குடை பிடித்தார்கள். முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் அப்படிப்பட்ட மட்டையை அந்தத் திருநபியின் சிரசின்மீது மாறிமாறிப் பிடித்துக் கொண்டே சென்றார்கள்.

அவர்களுள் ஒரு வாலிபன் தன்னுடைய தலைப் பாகையை ஓர் ஈட்டியின் முனையில் மாட்டிக் கொண்டு, அதை நபிகள் பெருமானுக்கு முன்னணியில் பிடித்துக் கொண்டு சென்றான்; அதுதான் முஸ்லிம்களால் பிடிக்கப்பட்ட

மூதற் கொடியாகும். நபிகள் பெருமான் ஸல் அந் நகரத்தின் வீதிகள் வழியே சென்றூர்கள். ஆண் களும், பெண்களும், குழந்தைகளும் தங்கள்வீட்டு வாயிலில் நின்று வேடிக்கை பார்த்தார்கள். "அல் லா(ஹ்)வின் திருத்தூதரே! எங்களுடன் வந்து இங்கு வசிப்பீராக! நாங்கள் தங்களுக்கு ஊழியம் செய்து உதவி புரிவோம். தங்களுக்காக நாங்கள் உயிரையும்விடத் துணிவோம்!" என்றுகூறி அவர் கள் ஊற்சாகத்தால் குதூகலம் கொண்டாடினூர்கள்.

"இல்லை! இல்லை! என்னுடைய ஒட்டகம் சென்று நிற்கட்டும். ஆண்டவன் நாடிய விடத் தில் இந்தப் பிராணி தானே சென்று நிற்கும்," என்று நபிகள் பெருமான் நவின்றருளினூர்கள்.

அவ்வாறே அவ் வொட்டகம் சென்று அபூ ஐயூபின் வீட்டுக் கெதிரில் நின்று விட்டது. உடனே நபிகள் பெருமானும் ஸல் அவ்விடத்தி லேயே தங்கிவிட்டார்கள்.

நபிகள் பிரான் ஸல் மக்காவைவிட்டு மதீனுவுக் குப் புறப்பட்டுச் சென்ற விசேஷந்தான் இஸ்லாத் தில் ஹிஜ்ரத் தென்று கூறப்படுகிறது; இதினின்று மேதான் முஸ்லிம்களின் வருஷக் கணக்கு ஆரம் பிக்கப்பட்டது; அந்தக் கணக்கு இம்மார்க்கத்தில் ஹிஜ்ரீ யென்று அழைக்கப்பட்டு வருகிறது. என வே, இப்பொழுது ஹி. 1347 நடைபெறுகிறது.

அது முதல் யதுரிப் என்னும் நகரத்துக்

குப் புதிய பெயரொன்று கொடுக்கப் பட்டது. அங்குள்ள மனிதர்கள் அந்த நகரத்தை "மதீனத்துன் நபீ" யென்று அழைக்க லாயினார். அஃதாவது, நபியின் நகர மென்று பொருள்படும். ஆனால், இப்பொழுது அது வெறும் மதீனா வென்று மட்டுமேதான் அழைக்கப்படுகிறது.

நபிகள் பெருமான்[ஸல்] தங்கள் மிகுதி வாழ் நாட்களை யெல்லாம் அந் நகரத்திலேயே கழித்து வந்தார்கள்.

# அதிகாரம்—8

## பத்ரு யுத்தம்

மக்கத்துக் குரைஷிகள் (காபிர்கள்) மகா பொல்லாதவர்களா யிருந்து வந்தார்கள். அவர்கள் மதீனத்துக்குச் சென்று சேர்ந்திருந்த அந்த ஏழை முஹாஜிரீன்களை (ஹிஜ்ரத்துச் சென்றவர்களை)ச் சும்மா விட்டுவைக்க மனம் இணங்கினார்களில்லை; அவர்கள் மதீனத்துக்குச் சென்று அங்கிருந்த எல்லா முஸ்லிம்களையும் ஒழித்துவிட வேண்டுமென்றே சூழ்ச்சி செய்துகொண்டிருந்தார்கள்; ஆதலின், அவர்கள் ஒரு பெரிய படையைத் திரட்டிக்கொண்டு மதீனாவின்மீது படை

யெடுத்துச் சென்றூர்கள். அதிலிருந்து முஸ்லிம்களுக்கும் மற்ற அராபியருக்கு மிடையில் சண்டை அடிக்கடி மூண்டுகொண்டுதா னிருந்தது. அதன் பயனுய் அவ்விரு கக்ஷியாருக்கு மிடையில் அனேக விதமான யுத்தங்கள் பல வருஷங்கள் மட்டும் நிகழ்ந்துகொண்டே யிருந்தன. இவ்லாம் எப்பொழுதும் தற்காப்பு யுத்தங்களில் தலையிட்டிருக்கிற தல்லாமல் ஒருபொழுதும் தன்னுடைய சொந்தப் பிரசாரத்துக்காகச் சண்டை செய்ய முன் வந்ததில்லை. சாந்தியே இஸ்லாத்தின் நோக்கமாதலின், நபிகள் பெருமான் எப்பொழுதும் அனுவசியமான சண்டைகளைப் பற்றிச் சிந்தித்ததே யில்லை. சாந்தியே அவர்களுடைய தோற்றமாய் விளங்கிற்று. ஆயினும், அந்தத் தற்காப்பு யுத்தங்களின் இறுதியில் முஸ்லிம்களே வெற்றி யடைந்து, தங்களுடைய சொந்த நகரமாகிய மக்காவையும் ஜயத்துடன் கைப்பற்றிக் கொண்டார்கள். அதன்பின் சில வருஷங்களுக்குள் அரப் நாட்டுக்குள்ளிருந்த எல்லா மனிதர்களும் சுயமே தீனுல் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார்கள்.

அம் முஸ்லிம்களுக்கும் குரைஷிகளுக்கும் இடையில் நிகழத் தொடங்கிய யுத்தங்களுள் பத்ரு யுத்தமே முதன் முதலில் ஆரம்ப மாயிற்று. "பத்ரு" என்னும் கிணற்றுக்கருகில் புரியப்பட்

டதனுல் அந்த யுத்தத்துக்கு இப்பெயர் வழங்க லாயிற்று. அந்த இடமானது மதீனுவிலிருந்து தெற்கே முப்பது மைல் தூரத்தில் அமைந் திருக்கிறது.

நபிகள் நாயகம்[ஸல்] ஹிஜ்ரத் சென்று இரண் டாவது ஆண்டில் மக்கத்துக் குரைஷ்குலத் தலை வர்கள் ஆயிரம்பேர் கொண்ட ஒரு சைன்யத் தைத் தையார்செய்து கொண்டு, மதீனுவை நோக் கிப் புறப்பட்டார்கள். ஆனுல், அவர்களுடன் எதிர்த்துப் போராட வேண்டியிருந்த முஸ்லிம் களோ முந்நூற்றுப் பதின்மூன்று பேர்தாம் காணப் பட்டார்கள். அவர்களுள் வயோதிகர் களும், வாலிபர்களும், சிறுவர்களும் கலந்திருந் தார்கள்; அந்தத் தொகையில் எழுபத்தேழு மனி தர்கள் முஹாஜிரீன்க ளாகவும், (மக்காவைவிட்டு மதீனுவுக்கு ஹிஜ்ரத்துச் சென்றவர்கள்) மற்றை யோர் அன்ஸார் களாகவும் (மதீனுவில் உதவி புரிந்தோர்) இருந்து வந்தார்கள். அவர்களனை வரும் பரம ஏழைகளாகவே வாழ்ந்து வந்தார் கள்; அவர்களுள் இருவரே குதிரை வீரர்களாக இருந்தார்கள்.

குரைஷிகள் அங்குள்ள மலைச்சாரலில் வந்த போது நபிகள்பிரான் உடனே இறைவனை நோக்கி, "ஏ என் ஆண்டவனே! ஏ என் ஆண்டவனே! இந்த யுத்தகளத்தில் முஸ்லிம்கள் ஒழிக்கப்பட்டு

விடுவார்களாயின், பிறகு உன்னை வணங்கக்கூடிய வர்கள் இத்தரணியின்மீது எவரே காணப்படப் போகின்ருர்?" என்று குறையிரந்து கொண்டார் கள். பிறகு அவர்கள் அந்த ஏழை முஸ்லிம்களை நோக்கி, "என் மக்காள்! தைரியத்தைக் கைவிடா தீர்கள்! உறுதியுடன் பலமாய் நிற்பீர்களாக! உங்களுடைய பாணங்களைச் செலுத்துங்கள்! நீங்கள் நிச்சயமாகவே ஜயம் பெறுவீர்கள்," என்று உரக்கக் கூவினுர்கள்.

பிறகு இரு வகுப்பாருக்கு மிடையில் யுத்தம் தொடங்கிற்று; அப்பொழுது நபிகள் பிரான்ஸல் ஓர் உயர்ந்த இடத்தில் இருந்து கொண்டு, கீழே நடந்த யுத்தத்தைக் கவனித்து வந்தார்கள். குறை ஷிகளைக் காட்டினும் முஸ்லிம்கள் சுமார் மூன்றி லொருபங்கே இருந்து வந்ததனுல், தங்களுடைய வெற்றியை இழந்து வந்தவர்களேபோல் காணப் பட்டார்கள். ஆதலின், அவர்கள் சிறிது பின் னிடைந்து போக ஆரம்பித்தார்கள்; ஆனுல், அவ் வேளையில் நபிகள் நாயகம்ஸல் அவர்களுக்கு அதிக தைரியத்தை ஊட்டி, மேன்மேலும் விடா மல் சண்டை செய்து வரும்படி ஏவிக்கொண் டிருந்தார்கள். பிறகு அந்த நபி பிரான்ஸல் தங்க ளுடைய ஆசனத்தைவிட்டு எழுந்து நின்று, ஆண்டவனை நோக்கிப் பிரார்த்தனை புரிந்தார் கள்; பிறகு தங்களுடைய கையில் ஒரு பிடி

மண்ணை யெடுத்து அதை ஆகாயத்தில் ஊதி யெறிந்தார்கள்.

அப்பொழுது, "ஆண்டவன் குரைஷிகளின் மூஞ்சியில் தோல்வியை இறக்கி வைப்பானாக!" என்று கூவினார்கள். அவ்வேளையில் இரு கக்ஷி யின் சைன்யங்களும் அந்த வார்த்தைகளைக் காதி னால் கேட்டன; உடனே முஸ்லிம்களுக்கு உதவி புரியும் பொருட்டு வானவர்களே இறங்கி வந்து விட்டதாக அவர்களனைவரும் அறிந்து கொண் டார்கள்; உடனே குரைஷிகளும் நடுக்கம் கொண்டு இருந்த விடத்துக்கு உத்தரவு சொல்லா மல் ஓடிப்போய் விட்டார்கள்.

அந்தத் தோல்வியால் எழுபது குரைஷ் வீரர்கள் யுத்தத்தில் கொல்லப் பட்டார்கள். மற்று மோர் எழுபது குரைஷிகள் மட்டும் யுத்தக் கைதி களாகப் பிடிக்கப் பட்டார்கள். ஆனால், இவர்க ளெல்லோரும் பிறகு விடுவிக்கப்பட்டே விட் டார்கள்.

இவ்விடத்தில் இதன் சார்பான சம்பவ மொன்றை உங்களுக்குச் சொல்லாமலிருக்க முடிய வில்லை; அபூபக்ர்[ரலி] அவர்கள் நபிகள் நாயகத் துடன்[ஸல்] இந்த யுத்தத்தில் சேர்ந்து சண்டை செய்தார்கள். அவர்களுடைய குமாரரான அப் துர் ரஹ்மான் என்பவர் அதுவரையில் இஸ் லாத்தைத் தழுவாம லிருந்ததனால், அந்த பத்ரு

யுத்தத்தில் குரைஷிகளுடன் சேர்ந்து கொண்டு முஸ்லிம்களுக்கு விரோதமாய்ச் சண்டை செய்தார். பிறகு சிலகாலம் சென்றபின் அந்த அப்துர் ரஹ்மானும் ஒரு முஸ்லிமாகவே ஆய்விட்டார். ஒரு நாள் இவர் தமது தந்தையாரை நோக்கி, "தந்தாய்! பத்ரு யுத்தத்தில் நான் தங்களுடைய உயிரைக் காப்பாற்றினேன்; ஒரு முறை தாங்கள் என்னருகில் வந்து விட்டீர்கள். அப்பொழுது நான் தங்களை இலகுவாகக் கொன்றிருக்கலாம்; ஆனால், நான் அவ்வாறு செய்யத் துணியவில்லை," என்று கூறினார். அதைக் கேட்டு அபூ பக்ர்ரலி அவர்கள், "வாஸ்தவந்தான்! நீ என்னைக் காப்பாற்றினாய். ஆனால், நானாயிருந்திருப்பின், உன்னைக் காப்பாற்றி யிருக்க மாட்டேன். ஏனெனின், உன்மீது நான் வைத்திருக்கும் அபிமானத்தைக் காட்டினும் அளவு கடந்த அபிமானத்தையே இஸ்லாத்தின்மீது வைத்திருக்கிறேன்," என்று மறுமொழி கூறினார்கள்.

# அதிகாரம்—9

## உஹத் யுத்தம்

ஆனுல், குரைஷிகள் இன்னமும் தங்கள் வைராக்யத்தை இழந்துவிட வில்லை; இன்னமும், அவர்கள் முஸ்லிம் களுடன் யுத்தம் செய்யும் நோக்கத்தை ஒழித்துவிட வில்லை. ஆதலின், மறுவருஷம் அவர்கள் மூவாயிரம் மனிதர்களைக் கொண்ட ஒரு பெருஞ் சேனையைத் திரட்டினுர்கள்; அதன்பின் அச்சேனையுடன் மதீனத்தின்மீது படையெடுத்துச் சென்ருர்கள். ஆனுல், அவ்வேளையில் நபிகள் பிரானிடம்ஸல் எழுநூறு மனிதர்களே இருந்து வந்தார்கள். அவ்விரு சேனைகளுக்கிடையில் உஹதென்னும் மலையடிவாரத்தில் ஓர் யுத்தம் தொடங்கிற்று; அம் மலையின் பெயரால் அந்த யுத்தத்துக்கு உஹத் யுத்தமென்று பெயர் வழங்க லாயிற்று. பத்ரு யுத்தத்தைக் காட்டினும் இஃதொரு பெரிய யுத்தமாகவே காணப்பட்டது.

அந்த யுத்தத்தின் பயனுய்க் குரைஷிகள் முதலில் ஓட்டம் பிடிக்கத் தலைப்பட்டார்கள். அதைக் கண்ட முஸ்லிம் வில் வீரர்கள் தங்களுடைய பத்திரமான ஸ்தானத்தை விட்டு அப்

புறம் சென்றார்கள். அந்த வில் வீரர்கள் அவ் விடத்தை விட்டு எப்பொழுதும் அசையவே கூடாதென்று நபிகள் பிரான்ஸல் உறுதியான கட் டளையிட் டிருந்தார்கள். ஆனால், அந்த நாற்பது வீரர்களும் தங்களுக் கிடப்பட்ட கட்டளையை மறந்து அப்புறம் சென்று, ஓடிப்போன குரைஷி களின் சாமக் கிரியைகளை யெல்லாம் சேகரிக்கும் பொருட்டு அங்கு வேகமாக ஓடினார்கள். அப் பொழுது முஸ்லிம் படையின் பின்புறமானது பாதுகாப் பில்லாமல் திறந்து கிடந்தது. அதை அங்குத் தோல்வியுற்ற குரைஷிகள் கண்டுகொண் டார்கள்; உடனே அவர்கள் அப் பின்புறமாக வந்து முஸ்லிம்களைத் தாக்கி, அவர்களுள் பல ரைக் கொன்றார்கள்.

காலி திப்னு வலீதின் கீர்த்தியைப் பற்றி இவ்வுலகில் அறியாத முஸ்லிம் குழந்தை ஒன் றும் இராதென்றே நம்புகிறோம். இவர் "ஸைபுல் லா(ஹ்)" (ஆண்டவனுடைய வாள்) என்று இஸ் லாமிய சரித்திரங்களில் அழைக்கப்படுகின்றார். இவரே இஸ்லாத்தின் ராஜ்யத்துடன் பாரசீகத் தையும், ஸிரியாவையும்(ஷாம்) வெற்றி கொண்டு சேர்ப்பித்தார். இப்படிப்பட்ட காலிதிப்னு வலீ தென்பவர் அந்த உஹத் யுத்தத்தின்போது குரை ஷிகளின் கக்ஷியில் சேர்ந்திருந்து கடும்போர் புரிந்தார். அவர் அந்தக் குரைஷிகளின் குதிரைப்

படையின் ஒரு பகுதிக்குத் தலைவராய் விளங்கினுர். அவர், "குரைஷிகளே! முன்னேக்கிச் செல்லுங்கள்! ஜயம் நம்முடையதாகும்! முஹம்மத்ஸல் கொல்லப்பட்டு விட்டார்," என்று யுத்தகளத்தில் உரக்கக் கூவித் தம் மனிதர்களுக் கெல்லாம் அதிக உற்சாகத்தை ஊட்டினுர். ஆனுல், அவ் விஷயத்தைக் கேட்டவுடன் முஸ்லிம்கள் கை சோர்ந்து மெய்தளர்ந்து சோக முற்று விட்டார்கள். அவர்களுக்கு அப்பொழுது இன்னதுதான் செய்வ தென்பது ஒன்றும் புரியவில்லை.

ஆனுல், உண்மையில் முஹம்மத் நபிஸல் இறந்து போகவில்லை; அவர்கள் காயம் மட்டுமே அடைந் திருந்தார்கள். அன்னவரின் கன்னங்களும் காயப்பட்டு விட்டன; முன்பல் ஒன்றும் உதிர்ந்து விட்டது. இதனுலெல்லாம் அவர்களுடைய திருமேனியி னின்றும் அதிகமான இரத்தம் வடிந்திருந்தது. இதனுல் அவர்கள் சோக முற்றுக் கிடந்தார்கள். அப்பொழுதும் எதிரிகள் நெருங்கித் தாக்கியதால் அவர்கள் ஒரு பள்ளத்துக்குள் வீழ்ந்து விட்டார்கள். அந்தக் கெபிக்குள் அதற்குமுன் அந்த யுத்தத்தில் கொல்லப்பட்டிருந்த முஸ்லிம்களின் பிரேதங்கள் அதிகம் கிடந்தன. அக் குழிக்குள் நபிகள் பிரான்ஸல் வீழ்ந்து நெடுநேரம் மட்டும் மூர்ச்சையாய்க் கிடந்தார்கள். அதற்கு முன் வெற்றி பெற்றவர்களே

போல் காணப்பட்ட முஸ்லிம்கள் இப்பொழுது குழப்பத்தினுல் தங்கள் நிலைமையில் தடுமாற்றங் கொண்டுவிட்டார்கள். ஏனெனின், ஒருவருக்கும் நபிகள் நாயகம்[ஸல்] இருந்தவிடம் தெரியவில்லை.

இறுதியில் அவர்க ளெல்லோரும் தங்கள் திரு நபியைத் தேட ஆரம்பித்தார்கள். அவர்களை முதன் முதலில் கண்டு பிடித்தவர் அபூபக்ர் ஸித்திக்[ரலி] அவர்களே யாவார்கள். உடனே மற்றவர்களும் அங்கு ஓடிச் சென்று, அந்தக் கெபிக்குள்ளிருந்து நபிகள் பெருமானை[ஸல்] வெளியில் எடுத்து விட்டார்கள். அதன்பின் அவர்களுக்கு மூர்ச்சை தெளிந்து, சிறிது நல்லுணர்ச்சியுடன் நாயகமவர்கள் இருந்து வந்தார்கள். அப்பொழுது அங்கிருந்த சிஷ்யர்களெல்லோரும் தங்களாலியன்றவரை பாடுபட்டுத் தங்கள் ஞானபிதாவுக்கு முற்றிலும் சுகமுண்டாகும்படி உதவி செய்து வந்தார்கள். அதன்பின் அந்தச் சிஷ்யர்கள் அனைவரும் இஸ்லாத்தின் விரோதிகளை யெல்லாம் அழித்து விடும்படி ஆண்டவனிடம் பிரார்த்தனை புரியுமாறு தங்கள் தலைவரிடம் கேட்டுக் கொண்டார்கள். அதைக் கேட்டு நபிகள் பெருமான்[ஸல்] "நான் ரக்ஷிப்பதற்காக வந்திருக்கிறேன்! சிக்ஷிப்பதற்காக வரவில்லை!" என்று முற்றிலும் மறுத்து விட்டார்கள். உடனே அவர்கள் தங்கள் கரத்தை யேந்தி, "என் ஆண்டவனே! இந்தக்

குரைஷிகளை யெல்லாம் நேரானவழியில் கொண்டு வந்து சேர்ப்பாயாக. ஏனெனின், இவர்கள் தாங்கள் செய்வது இன்ன தென்பதைச் சற்றும் அறிந்து கொள்ள வில்லை," என்று அதிக உருக்கத் துடன் பிரார்த்தனை புரிந்தார்கள்.

இத்தப் பிரார்த்தனையானது நபிகள் பெருமானின் இணையற்ற பெருந்தன்மையையும், அவர்களுக்கு மனித வர்க்கத்தாரிடம் இருந்து வந்த கருணையையும் அதிகம் காட்டுகின்றது. ஏனெனின், அவர்கள் தங்களுடைய உயிருக்கு அபாயம் நேரிட்ட காலத்திலும் எதிரிகளுக்கு விரோதமாய் ஆண்டவனிடம் பிரார்த்தனை புரிய மறுத்து விட்டார்கள்.

அப்பொழுது முஸ்லிம்கள் அதிக தைரியமடைந்து விட்டார்கள்; அதன்பின், உடனே அவர்கள் மீண்டும் எதிரிகளைத் தாக்கினார்கள். அப்பொழுதும் இரண்டாவது முறையாக அந்தக் குரைஷிகள் தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள். ஆதலின், அவர்கள் தங்கள் யுத்தத்தை விட்டு விட்டு ஓட்டம் பிடித்தார்கள். இதனால் முஸ்லிம்களுக்கு ஒரு பெரிய வெற்றியே கிடைத்தது.

உஹுத் யுத்தத்துக்குப்பின் முஸ்லிம்கள் மற்றும்பல யுத்தங்களிலும் தலையிட்டு வெற்றி கொண்டார்கள். ஒவ்வொரு ஜயத்திற்குப் பின்னும் மேன் மேலும் மனிதர்கள் இஸ்லாத்தை அங்கீகரித்

துக் கொண்டே வந்தார்கள். நாளுக்குநாள் முஸ்லிம்களின் தொகையும் அதிகரித்து, நபிகள் பெருமானின்ஸல் நிலைமையும் பலங்கொண்டு வந்தது.

இவ்வாறு இருந்துவருங் காலையில், மக்கத்துக் குரைஷிகள் நடந்து கொண்ட ஒரு முக்கியமான அநீதியினால் முஸ்லிம்கள் அந் நகரத்தின் மீது படையெடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் நேரிட்டுவிட்டது. அப்பொழுது ஒரு பெருந் திரளான சேனையுடன் நபிகள் பிரான்ஸல் திரு மக்காவின்மீது படையெடுத்துச் சென்றார்கள். அவ் வேளையில் மக்கத்துக்கு வெளியில் வந்து குரைஷிகள் சிறிது எதிர்த்துப் பார்த்தார்கள்; முஸ்லிம்கள் அதிக தீரத்துடன் அச்சமயம் சண்டை செய்தார்கள். குரைஷிகளும் தங்களுடைய வீரத்தைக் காட்டினார்கள்; ஆனால், இறுதியில் தோல்வியடைந்து வழி விலகிச் சென்று விட்டார்கள். உடனே நபிகள் பெருமானார்ஸல் ஜயபேரிகையுடன் மக்கத்துக்குள் நுழைந்து, அங்கே தங்கள் வெற்றிக் கொடியை நிலைநாட்டினார்கள்.

இப்படிப்பட்ட சாத்வீகமான வெற்றி இவ்வுலகில் வேறெங்கும் நிகழ்ந்ததில்லை. ஏனெனின், அவர்கள் தோல்வியுற்ற அம் மக்கத்து மனிதர்களை ஒன்றும் துன்புறுத்தவில்லை; எந்த முஸ்லிமும் எந்தக் குரைஷியையும் கொள்ளையடிக்க வேணும், கொலை செய்யவேணும் துணிந்துவிட

வில்லை. ஏனெனின், நபிகள் நாயகத்தின் உத்த ரவு அவ்விதமாய் இருந்து வந்தது. குரைஷிகளுக் கும் அவர்களின் தலைவர்களுக்கும் போதுமான மரியாதை காட்டப்பட்டது. அவர்க ளெல்லோ ரும் தங்களுக்குக் கொலைதண்டனையே கிடைக்கு மென்று நினைத்துக் கொண்டு, அதிக திகிலுடன் அங்குவந்து சேர்ந்தார்கள். "நீங்கள் எனக்குப் பற்பலவிதமான துன்பங்களை யெல்லாம் செய்தி ருக்கிறீர்கள். ஆயினும், சகோதர முறையில் இப் பொழுது எதை என்னிட மிருந்து எதிர் பார்க் கின்றீர்கள்?" என்று நபிகள் பெருமான்ஸல் மிக்க பெருந் தன்மையுடன் வினவினார்கள்.

அதற் கவர்கள், "நீர் எங்கள் சகோதரர் மைந்த ரானதால் சகோதர முறைமைக் குள்ள அபிமானத்தையே உம்மிட மிருந்து எதிர்பார்க் கிறோம்," என்ற ஏகோபித்த விடையை யளித் தார்கள்.

"சகோதரர்! நீங்கள் க்ஷேமமா யிருங்கள்! எப்பொழுதும் பத்திரமா யிருங்கள்! சுயேச்சை யுடனு மிருங்கள்!" என்னும் அபயமே அவர் களுக்கு அன்று அளிக்கப்பட்டது.

அப்பொழுது கஃபாவுக்குள் 360 விக்கிரகங் கள் வைக்கப்பட் டிருந்தன. நபிகள் பிரான்ஸல் அவைகளை யெல்லாம் எடுத்தெறிந்து நாசப்படு த்திவிடச் செய்தார்கள். அன்று முதல் கஃபா

வானது விக்கிரக ஆராதனையை விட்டுப் பரிசுத்த மடைந்து விட்டது. அதன்பின் மக்கத்து மனிதர்க ளெல்லோரும் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார்கள். அவர்களுக்குள் அபூஸுப்யானும் காணப்பட்டார்; இவரே நபிகள் நாயகத்தின்ஸல் பழைய விரோதியாய் இருந்துவந்தார்; இவரும் இவரது மனைவியான கொடிய ஹிந்தாவும் கூட மன்னிக்கப்பட்டார்கள்.

மக்காவில் வெற்றி கிடைத்தவுடன் முஹம்மத் நபியின்ஸல் பிரக்கியாதியானது நானுபக்கத்திலும் பரந்துசெல்லத் தலைப்பட்டது. எல்லாத் திசைகளிலிருந்தும் தூதர்கூட்டங்கள் திரள்திரளாகவந்து இஸ்லாத்தை அங்கீகரித்துக் கொண்டார்கள். "குதிரை வீரனொருவன் அரப் நாட்டின் வடக்கெல்லையி லிருந்து தெற்கெல்லை வரை சவாரி செய்து செல்வானுயின், அவன் எங்கே பார்த்தபோதிலும் முஸ்லிம்களையே கண்டுகொள்வான்," என்று நபிகள் நாயகம்ஸல் ஒரு தீர்க்க தரிசனம் செய்திருந்தார்கள். இவ்விஷயம் பிறகு சில வருஷங்களுக்குள் உண்மையாகவே நிறைவேறி விட்டது. ஏனெனின், அரப் நாட்டி லுள்ள எல்லா மனிதர்களும் தீனுல் இஸ்லாத்தை அங்கீகரித்து விட்டார்கள். இப்படிப்பட்ட அதிசய சம்பவங்க ளெல்லாம் ஹிஜ்ரத்துக்குப்பின் பத்து வருஷ காலத்துக்குள் நிகழ்ந்துவிட்டன. இது தான் இஸ்லாத்தின் பரிபூரண வெற்றியாகும்.

# அதிகாரம்—10

## நபியவர்கள் மரணம்

அதன்பின் நபிகள் பிரான்[ஸல்] இவ்வுலகத்தில் செய்யவேண்டிய காரியங்களெல்லாம் நன்கு நிறைவேறி விட்டன. அத் தேசத்தில் உள்ள எல்லா மனிதர்களும் ஒரே கடவுள் என்னும் கொள்கையை முற்றிலும் ஒத்துக்கொண்டு விட்டார்கள். அதன்பின் முஹம்மத்நபி[ஸல்] சுகக் குறை வடைந்தார்கள்; அதனால், அவர்களுடைய ஆயுளும் தனக்குரிய முடிவைச் சமீபித்துக் கொண்டு வந்தது. தங்களுடைய நெருங்கி வரும் மரணத்தை அவர்களும் அறிந்து கொண்டார்கள். ஆதலின், அப்பெருமானார் மஸ்ஜிதுக்குள் சென்றார்கள்; அச்சமயம் அவர்களைச் சூழ்ந்து அதிகமான ஜனங்கள் கூடிக்கொண்டார்கள்.

அங்கிருந்தவர்களை நோக்கி நபிகள் நாதர்[ஸல்] பின்வருமாறு பேசத் தொடங்கினார்கள்:—"உங்களெல்லோருக்கும் நான் நீதத்தையே செய்ய முயன்றுவந் திருக்கின்றேன். எவருக்கும் நான் யாதொரு விதமான தீமையும் இழைத்த தில்லை. உங்களிடத்தில் நான் பக்ஷத்துடன் நடந்துவந்

திருக்கிறேன். எவருக்கேனும் ஏதேனும் தீங்கிழைத் திருப்பேனுயின், அப்படிப்பட்டவர் என்முன் வரக்கடவர். அவர் தமக் கிழைக்கப்பட்ட தீமைக்குச் சரியான தீமையையே எனக்கும் இழைத்துக்கொள்ளக் கடவர். வேறு எவருடைய சொத்தையேனும் நான் எடுத்திருப்பே னுயின், அவரும் முன்னேக்கி வரக் கடவர்.”

இதைக் கேட்டவுடன் அங்கிருந்த ஒருவர் முன்னேக்கி வந்து, “ஆம். என்னிடத்திலிருந்து தாங்கள் மூன்று திர்ஹம் வாங்கி யிருக்கிறீர்கள். ஆனல், நாளிதுவரை அவை எனக்குத் திருப்பிக் கொடுக்கப்பட வில்லை. ஆதலின், அந்தக் கடனைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்,” என்று வேண்டிக் கொண்டார்.

“இதற்காக உமக்கு நான் வந்தன மளிக்கின்றேன். இதை நீர் ஞாபகப் படுத்தியதற்காக நான் அதிக சந்தோஷ மடைகின்றேன். ஏனெனின், ஆண்டவன் முன் நான் படவேண்டிய அவமானத்தை நீர் நிவர்த்தி செய்துவிட்டீர்,” என்று மறுமொழி கூறினர்கள்.

உடனே அந்தத் தொகையும் கொடுக்கப்பட்டு விட்டது. அதன்பின் ஹிஜ்ரீ 11-ஆம் ஆண்டில் ரபீஉல் அவ்வல் மாதம் பிறை 12-ல் திங்கட்கிழமை நமது நபிகள் பிரான்ஸல் அதிக அமைதியுடனும், மிக்க சாந்தத்துடனும் ஆண்டவனையின்

சன்னிதானத்தை அடைந்து விட்டார்கள். அப்பொழுது அவர்களுக்கு வயது அறுபத்து மூன்று. அவர்களுடைய தேகம் அந்நகரத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது. அங்குத்தான் இன்றளவும் அவர்களுடைய சமாதி (ரௌலா ஷரீபு) அமைந்திருக்கிறது.

முஹம்மத் நபியின்ஸல் பழக்க வழக்கங்களெல்லாம் மிகச் சாதாரணமாய்க் காணப்பட்டு வந்தன. அவர்களுடைய உடையும் எப்பொழுதும் கரடுமுரடான வஸ்திரத்தினாலேயே செய்யப்பட்டிருந்தது. அவர்களுடைய ஆகாரமும் சர்வ சாதாரணமாகவே யிருந்து வந்தது. பேரீச்சங் கனி, வாற்கோதுமை, ஒட்டகத்தின் பால், தேன் ஆகிய இவைகளே அவர்களால் அதிக விருப்பத்துடன் கொண்டாடப்பட்டு வந்தன. தங்களுடைய வஸ்திரங்களைத் தாங்களே தைத்துக் கொள்வதிலும், தங்களுடைய பாதரக்ஷைகளைத் தாங்களே பழுது பார்த்துக் கொள்வதிலும் அவர்கள் ஒரு சிறிதும் லஜ்ஜை யடைந்ததில்லை. அவர்களே பாலும் கறப்பார்கள்; வீட்டையும் பெருக்கிச் சுத்தம் செய்து கொள்வார்கள். அவர்கள் சிறு குழந்தைகளையும், அனாதைச் சிறுவர்களையும் அதிகம் நேசித்து வந்தார்கள். எப்பொழுதும் அவர்கள் அச்சிறுவர்களிடம் அதிக பிரியத்துடன்தான் சம்பாஷணை புரிவார்கள். ஒரு

முறை அவர்கள் தங்கள் மனைவியான ஆயிஷா வைரலி நோக்கி, "ஆயிஷா! ஏழைகள் மீது இரங்கி, அவர்கள்பால் பக்ஷம் பாராட்டுவா யாக. அவர்களை உன்னருகில் அழைத்துக் கொள்; ஆண்டவனும் தன்னருகில் உன்னை அழைத்துக் கொள்வான்," என்று அறிவுறுத்தினார்கள்.

எல்லா மனிதர்களிடத்திலும் அந்த நபிகள் நாயகம்ஸல் அதிக பக்ஷத்துடன்தான் நடந்துவந் தார்கள்; அவர்கள் மற்றப் பிராணிக ளிடத்திலும் அதிகமான அபிமானத்தையே காட்டி வந்தார் கள். எல்லாப் பிராணிக ளிடத்திலும் எப்பொழு தும் பக்ஷமாய் இருக்கும்படியே அவர்கள் தங்கள் சிஷ்யர்களுக்கும் அடிக்கடி உபதேசம் புரிந்து வந்தார்கள். அவர்கள் ஒருபோதும் வசை மொழியே பேசியதில்லை; ஒருவரையும் எப்பொழு தும் அவர்கள் கடிந்து கொண்டதுமில்லை. தங்க ளுடைய ஜன்ம விரோதிகளான எதிரிகளையும் அவர்கள் ஒருகாலும் சபிக்க மாட்டார்கள்.

ஒரு முறை நபிகள் பிரான்ஸல் ஒரு பேரீச்ச மரத்தின்கீழ்த் தனியே சயனித்துக் கொண்டிருந் தார்கள். அப்பொழுது எதிரி ஒருவனுடைய சப்தத்தைக் கேட்டு விழித்துப் பார்த்தார்கள். உடனே அந்த அரபி தன்னுடைய உடைவாளை உருவிக்கொண்டு, "ஓ முஹம்மதே! இப்பொழுது என் கையிலிருந்து உன்னைக் காப்பாற்றுவதற்கு

யார் இங்கே இருக்கிருர் ?'' என்று பயமுறுத் தாட்டி வினவினுன். உடனே அதைக்கண்டு நபி கள் நாயகம்ஸல் சற்றும் மனங் கலங்காமல் அதிக அமைதியுடன், "ஆண்டவன் இருக்கின்ருன் !'' என்று சாந்தமாக விடை கொடுத்தார்கள்.

அதைக் கேட்டவுடன் அந்த அரபிக்கு அளவு கடந்த திகில் பிறந்து விட்டது; உடனே அச்சத்தால் அவன் நடுக்கங் கொண்டான். ஆதலின், அவன் கையிலிருந்த வாளாயுதமும் கீழே நழுவிற்று. அதைக் கண்டவுடன் நபிகள் பெருமான் அந்தக் கட்கத்தைத் தங்கள் கையி லெடுத்துக் கொண்டு அதை அவனுடைய தலை க்குமேல் ஓங்கி, "இப்பொழுது சொல்! இங்கு உன்னைக் காப்பாற்றக் கூடியவர் யார் இருக் கின்ருர் ?'' என்று வினவினுர்கள்.

" அந்தோ! தங்களைத் தவிர்த்து வேறு யாரும் இல்லையே !'' என்று அவன் மனங்கலங்கி மறுமொழி கொடுத்தான்.

"அவ்வாருயின், என்னிடத்தி லிருந்து எதி ரிக ளிடத்திலும் பக்ஷமா யிருத்த லென்னும் பாடத்தைக் கற்றுக்கொள்,'' என்று நம் நபிகள் நாதர்ஸல் உறுத்திக் கூறினுர்கள்.

உடனே அவனுடைய வாளாயுதமும் அவன் வசம் ஒப்புவிக்கப்பட்டது.

உடனே அந்த அரபியின் மனக் கண்ணும்

திறக்கப்பட்டது; ஆதலின், அவரே அல்லா(ஹ்) வின் உண்மையான நபி யென்பதை அவன் அக் கணமே உணர்ந்து கொண்டான். அப்பொழுதே அவ் வரபியும் இஸ்லாத்தைத் தழுவி விட்டார்.

முஸ்லி மல்லாதவர்களையும் எப்பொழுதும் முஹம்மத்நபிஸல் அவர்கள் தக்க மரியாதையுடன் தான் நடத்தி வந்தார்கள்; பரமவிரோதிகளையும் அவர்கள் எப்பொழுதும் வெறுப்புடன் நடத்திய தில்லை. இன்னமும், எவரையும் அவர்கள் முஸ் லிமாகும்படி எப்பொழுதும் வற்புறுத்தியதில்லை. ஆனால், இதோப தேசத்தினால்தான் எக்காலத் தும் அவர்கள் இஸ்லாமியப் பிரசாரம் செய்து வந்தார்கள்.

# அதிகாரம்—11

## அல் இஸ்லாம்

இஸ்லாமென்பது ஓர் இலேசான மார்க்க மாகும். இதை ஒரு சிறு குழந்தை யும் தெரிந்து கொள்ளலாம். ஆண் டவன் ஒருவனே யென்று இம் மார்க்கம் போதிக்கின்றது. அவன் எங்கும் நிறைந்திருக்கிறான். நாம் செய்யும் ஒவ்வொன் றையும் அறிந்து கொள்ளுகிறான். அவன் ஒரு

வராலும் பெறப்படவு மில்லை; படைக்கப்படவு மில்லை. அவனும் வேறு எவரையும் பெறவு மில்லை. அவனே இவ்வுலக முழுதையும் சிருஷ்டித்திருக்கிறான்; இதிலுள்ள ஒவ்வொன்றையும் படைத்தவன் அவனே. அவன் நமக்கு உயிரையும் கொடுத்திருக்கிறான்; ஆகாராதிகளையும் அளித்திருக்கிறான். நாம் வேறொரு மனிதனுக்கும் அஞ்சவேண்டிய தில்லை; ஆனால், ஆண்டவனுக்கு மட்டும் அஞ்சி நடக்கவேண்டும். அவனை ஒருபோதும் மறப்பது கூடாது.

பழைய காலத்தில் மனிதர்கள் ஆண்டவனை உள்ளபடி அறிந்து கொள்ள வில்லை; அவர்கள் பல தெய்வங்கள் உண்டென்று நம்பி, அவற்றிற்கெல்லாம் பூஜை செய்து வந்தார்கள். நல்லது இன்னதென்றும், தீயது இன்னதென்றும் அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. பொய் சொல்வது பாபமென்றும், திருடுவது குற்றமென்றும் அவர்கள் நினைக்கவில்லை. அவர்கள் வீணாகவே பிற மனிதர்களைக் கொன்றுவந்தார்கள்.

ஆதலின், ஆண்டவன் தன்னுடைய திருத்தூதர்களை அடிக்கடி இவ்வுலகத்தின் பல தேசங்களுக்கும் அனுப்பி வைத்தான். அந்த அந்த நபிமார்களும் அந்த அந்த ஜனங்களை நேர்வழியில் திருப்பி வைத்தார்கள். இப்ராஹீம், மூஸா, ஈஸா (அலை) எல்லோரும் ஆண்டவனுடைய திருத்

தூதர்களே யாவார்கள். "இப் பிரபஞ்சத்தில் ஒரே தெய்வந்தான் உண்டு. எல்லோரும் அவ னையே வணங்க வேண்டும்," என்றே அவர்க ளெல்லோரும் அந்த ஜனங்களுக்கு உபதேசித்து வந்தார்கள்.

முஹம்மத் நபிஸல் அவர்க ளெல்லோருக்கும் இறுதியில் வந்த மகா பெரிய திருத்தூதராவர். இவரால் கொண்டுவரப்பட்ட இஸ்லாமே மகா மேலான இலேசான மதமாகும்.

"உண்மையில் ஆண்டவனுக்குப் பிரிய மான மார்க்கம் ஒன்றுதான் உண்டு; அதுதான் இஸ்லாம்," என்று நமது திருமறையான குர் ஆன்ஷரீபும் விளம்பி யிருக்கின்றது.

ஒரு முஸ்லிம் முதன் முதலில் நம்ப வேண் டிய விஷயம் இதுதான்: "இப்பிரபஞ்சத்தில் ஒரே தெய்வந்தான் காணப்படுகின்றது; முஹம் மத்ஸல் அவனுடைய திரு நபியாக விளங்கு கின்றார்." இதுதான் முஸ்லிம்களின் பரிசுத்தக் கலிமா என்று சொல்லப்படுகிறது.

முஸ்லிம்களுக் குரிய பரிசுத்த வேதமானது குர்ஆன் ஷரீபா யிருக்கிறது; இது அரபு பாஷை யில் எழுதப்பட்டு இருக்கிறது. இவ்வேதத்தை ஆண்டவன் தன்னுடைய திரு நபி முஹம்மத்ஸல் மூலமாய் இங்குள்ள ஜனங்களுக் கெல்லாம் அனுப்பி யிருக்கிருன். இதில் எல்லோருக்கும்

உபயோகமுள்ள அனேகம் புத்திமதிகள் நிரம்பிக் கிடக்கின்றன.

நபிகள் நாதருக்கு ஸல் உங்களைப்போல் எழுதப் படிக்கத் தெரியாது. ஆதலின், இவர் "உம்மீ நபி" என்றே அழைக்கப் படுகிறார். இவருக்கு வானத்திலும் பூமியிலு முள்ள எல்லா இரகசியங்களும் ஆண்டவனால் வெளியாக்கப்பட் டிருந்தன. குர்ஆன்ஷரீபின் வாசகங்கள் மிகஅழகாக அமைக்கப்பட் டிருக்கின்றன; இவை போன்ற வாசகங்களை இதுவரையில் ஒருவரும் எழுதி முடிந்தாரில்லை. குர்ஆன் ஷரீபானது ஆண்டவன் திருவசனமென்றே அழைக்கப்படுகிறது. அமரர்களென்னப்படும் மலக்குகள் உண்டென்றும் முஸ்லிம்கள் நம்புகிறார்கள். ஆண்டவன் இவ்வுலகத்தைப் பின்னொரு சமயம் அழித்துவிடுவானென்றே நம்பியிருக்கிறார்கள். அதன்பின் எல்லோரும் தங்கள் தங்கள் புதை குழிகளி லிருந்து வெளியில் வருவார்கள். அதற்குப் பிறகு நல்ல மனிதர்களை ஆண்டவன் சுவர்க்கத்திற்குள் அனுப்பி வைப்பான்; தீய மனிதர்களை அவன் நரகத் தீயுள் தள்ளிவிடுவான். இதுதான் நியாயத் தீர்ப்புநா ளென்று சொல்லப்படுகிறது.

இஸ்லாம் மனிதர்களை நல்லவர்களா யிருக்கும்படி போதிக்கின்றது. முஸ்லிம்கள் ஒருவருக்கும் தீங்கு செய்வது கூடாது. இவர்கள் திருடு

வதும் கூடாது; பொய் சொல்லுவதுங் கூடாது; கெட்ட எண்ணங்களைக் கொள்வதும் கூடாது. இவர்கள் ஒவ்வொரு நாளும் ஐந்துவேளை ஆண்டவனை நோக்கித் தொழுதுகொள்ள வேண்டும். ரமலான் மாதத்தில் இவர்கள் நோன்பு வைக்க வேண்டும். சௌகரியப்பட்டால் இவர்கள் ஆயுளில் ஒருமுறையேனும் மக்காவுக்குச் சென்று யாத்திரை செய்து வரவேண்டும். இதுதான் இஸ்லாத்தில் ஹஜ்ஜென்று சொல்லப்படுவது.

முஸ்லிம்கள் ஏழைகளுக்கு இரங்கவேண்டும்; அனாதைகளுக்கு ஆதரவளிக்க வேண்டும். உண்மையான ஏழைகளுக்கு உதவி புரியும் பொருட்டு இவர்கள் தானதர்மம் செய்யவேண்டும். இதுதான் ஜகாத்தென்று சொல்லப்படுவது. ஆனால், பிச்சைத் தொழிலையே சதா உயிர் வாழ்க்கையாகக் கொள்வதற்கு இஸ்லாத்தில் சற்றும் இடமில்லை.

எல்லா முஸ்லிம்களும் சகோதரர்களே. ஆண்டவன் முன்னிலையில் ஏழைகளும் பணக்காரர்களும் ஒரே சமமாகவே பாராட்டப்படுகிறார்கள். ஆதலின், எந்தப் பணக்கார முஸ்லிமும் ஏழை முஸ்லிமைக் கண்டு வெறுப்புக்கொள்ள மாட்டார். ஏழைகளும் பணக்காரர்களும் ஆண்டவன் முன் சரிசமானமாகவே நின்று தொழுது கொள்வார்கள்.

"மனிதர்கள் நல்ல செய்கைகளைக் கொண்டே காப்பாற்றப் படுவார்கள். அப்படிப்பட்ட நல்ல மனிதர்களுக்கே சுவர்க்கம் கொடுக்கப் படும்," என்று நபிகள் பிரான்ஸல் கூறியிருக்கிறார்கள்.

"நான் ஆண்டவனுடைய சிருஷ்டியாகவும், அவனுடைய தூதனாகவும் இருக்கிறேன். மற்றையோர் மரிப்பதேபோல் நானும் மரித்துப் போவேன்," என்றும் அந்த நபிகள் பிரான்ஸல் அடிக்கடி சொல்லிக்கொண் டிருப்பார்கள். இஸ்லாம் மார்க்கப்படி ஆண்கள் பெண்களை அதிக மரியாதையுடன் நடத்த வேண்டும். "தாயாரின் பாதத் தடியில்தான் மைந்தனது சுவர்க்கம் அமைந்திருக்கிறது," என்று அவர்கள் எப்பொழுதும் சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

உண்மையான முஸ்லிம் இப்படிப்பட்டவரென்று நபிகள் நாயகம்ஸல் நன்கெடுத்து ஓதியிருக்கிறார்கள்:—

"ஆண்டவனுடைய அடியார்கள் தரணியின் மீது அதிக சாந்தத்துடன் நடந்து கொள்வார்கள். இராக்காலத்தில் ஆண்டவனுக்கு வணக்கம் புரிவார்கள். ஆண்டவனைத் தவிர்த்து வேறு யாரையும் தெய்வமாக வணங்க மாட்டார்கள். அவர்கள் பொய்சொல்ல மாட்டார்கள். அவர்கள் எவருக்கும் தீங்கிழைக்க மாட்டார்கள். அவர்கள்

ஆண்டவன் ஆணைப்படியே நடப்பார்கள். எப்படிப்பட்ட தீமையையும் இழைக்க மாட்டார்கள்."

இவர்களே முஸ்லிம்கள். இவர்கள் அயலார் சொத்துக்கு ஆசைப்பட மாட்டார்கள். இவர்கள் மதபேத அபிப்பிராயத்தின் நிமித்தம் எவரையும் துன்புறுத்த மாட்டார்கள். இவர்களுக்கே சுவர்க்கம் சித்திக்கும். ஆதலின், கத்தியின் முனையால் தீனுல் இஸ்லாம் பரப்பப்பட்ட தென்பது ஒரு வீண் பொய்யே யாகும். இவர்களுடைய மார்க்கம் சாந்திமார்க்கமே யாகும். எனவே, இப்படிப்பட்டவர்கள் சுவர்க்கத்துக்குள் எப்பொழுதும் ஒழியாது வசித்துக் கொண்டே சதா சாந்தியை அனுபவித்துக்கொண் டிருப்பார்கள்.

எனவே, எம் முஸ்லிம் சிறுவர்காள்! நீங்களும் இந்த ரசூல் நாயகமவர்கள் ஸல் நிலை நிறுத்தி விட்டுச் சென்ற இந்த தீனுல் இஸ்லாத்தில் கூறிய வண்ணம் ஒழுகி, ஆண்டவனுக்கும் திருப்தி யளித்துக் கொண்டு, அவ்வாண்டவனுடைய திருப்தியையும் சதா அடைந்து கொண்டு, அவனுடைய சுவர்க்கானந்தத்தை என்றென்றும் ஓய்வில்லாது பெறுதற்கு வேண்டிய உத்தம சத்திய சன்மார்க்கத்தில் நிலை நின்று வருவீர்களாக. ஆமீன்.

PRINTED AT THE GUARDIAN PRESS, LTD., MADRAS—1928.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

# தாஜ்மஹால்

(பல ஆப்டோன் அழகிய சித்திரப் படங்களுடன்)

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது.

## முற்றிலும் திருத்திப் புதுப்பித்த 2—ம் பதிப்பு

இதில் தாஜ்மஹாலின் முழுவிவரமும், ஷாஜஹான், மும்தாஜின் சரித்திர விவரமும், உயிர் வாழ்க்கையும் நிரம்பித் ததும்புவதுடன், I ஷாஜஹானின் சரிதை, II தாஜ்மஹாலைக் கட்டியது யார்? III மும்தாஜ்மஹால் என்னும் மூன்று அனுபந்தங்களும் அழகுடன் பொதிந்திருக்கின்றன. இதில் பல ஆதாரமுள்ள நூல்களிலிருந்தே விஷயங்கள் திரட்டப் பட்டிருப்பதால், இந்நூலை ஒருமுறை வாசித்தமாத்திரத்திலேயே தாஜ்மஹாலையும், ஷாஜஹான் மும்தாஜின் சரித்திரத்தையும் அக்கால முகல் ராஜ்யத்தின் நிலைமையையும் பற்றிச் செவ்வனே தெரிந்து கொள்ளலாம். ஸ்ரீமான்களான வை. சூரியநாராயண சாஸ்திரியார், யதுநாத சர்க்கார், மஹாராணி ஸுநிதிதேவி முதலியோரைப் பற்றிக் கேள்வியுற்றோர்க்கெல்லாம் இந்நூலின் பெருமை நன்கு விளங்கும். தாஜ்மஹாலைப் பற்றி இத்துணைச் சம்பூரணமாய் வேறெந்த நூலிலிருந்தும் இத்தமிழ்நாட்டில் நீங்கள் தெரிந்துகொள்ளமாட்டீர்கள். இது முதற்பதிப்பைக் காட்டினும் மிக நன்றாகத் திரட்டப்பட்டிருக்கிறது. இப்பொழுது இதில் 74-பக்கங்களுண்டு. மும்தாஜை ஷாஜஹான் விவாகம் செய்துகொண்ட வரலாறு, மும்தாஜ் பேகம் மரமணமடைந்த வரலாறு முதலியவெல்லாம் மிக நன்றாகச் சிறுவர்களுக்கும் விளங்குமாறு வரையப்பட்டிருக்கின்றன.

இதன்விலை அணா 6 தான். எல்லாப் புத்தகஷாப்புகளிலும் கிடைக்கும். இன்றேல் எமக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

தாருல் இஸ்லாம் புஸ்தகசாலை,

73, தம்புசெட்டித் தெரு, சென்னை.

# தாருல் இஸ்லாம் புஸ்தகசாலை

## பிரசுரங்கள்:

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| "ஜவாஹிருல் 'புர்:கான்'" :குர்ஆன் ஷரீ'பின் தமிழ் மொழிபெயர்ப்பும் அதன் விரிவான வியாக்யானமும் ஒருங்கே கூடிய முதலிரண்டு வெளியீடுகள் | டக்ஸீன் பைண்டு | 3 | 0 |
| ஷை மூன்றாம் வெளியீடு (அம்மயத்) | ,, | 2 | 0 |
| நபிகள் நாயகமும் நான்கு தோழர்களும் | ,, | 1 | 4 |
| இஸ்லாம் சித்திரப்படத்துடன் (3-ம் பதிப்பு) | ,, | 1 | 0 |
| நாயக வாக்கியம் 451, 1 & 2 பாகம் ... | ,, | 0 | 14 |
| ஷை அரபுத் தமிழில் ... ... | ... | 1 | 4 |
| இஸ்லாம் எப்படிச் சிறந்தது?... ... | ... | 0 | 14 |
| ஈமான் (2-ம் பதிப்பு) ... ... ... | ... | 0 | 6 |
| முஸ்லிம்களின் முன்னேற்றம்... ... | ... | 0 | 6 |
| ஆரியருக்கொரு வெடிகுண்டு (2-ம் பதிப்பு) | ... | 0 | 12 |
| ஆரியசமாஜிக்கர்ப்பணம் ... ... | ... | 1 | 0 |
| தாஜ்மஹால் (பல படங்களுடன் 2-ம் பதிப்பு) | ... | 0 | 6 |
| மறுகமலம் (12 வியாசங்கொண்டது) ... | ... | 0 | 8 |
| ஜுபைதா அல்லது பழிக்குப்பழி (அழகிய சிறு கதை) | | 0 | 4 |
| பண்டிதை மெஸ்மெரிஸா (நமது அழகிய நாவல்) | | 1 | 8 |
| மஹேந்திரஜாலம் (பாதிரி ரஸ்புட்டீன் சரிதை)... | | 0 | 12 |
| நூர்ஜஹான் - படத்துடன் ... | ... | 0 | 8 |
| கௌஹர்ஜான் 1 & 2 பாகம். பாகம் 1-க்கு | ... | 1 | 8 |

## இதர பிரசுரங்கள்:

| | | | |
|---|---|---|---|
| ஜீவ வசிய பரம ரகசியம் (காலிகோ பைண்டு) | ... | 3 | 0 |
| இயேசுவின் இரகசியம் ... ... | ... | 1 | 8 |
| பாயிலுர் ரஹ்மானி என்னும் முஹம்மதிய லா | ... | 0 | 14 |

தபாற்பெட்டி 15, சென்னை.